# சான்றோர் குரல்

SAANDROR KURAL - Tamil Monthly

மக்களுக்கான குரல்

தமிழ் மாத இதழ்

● குரல் – 5 ● இதழ் – 5 ● ஜூலை, 2025 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/–

● Volume - 5 ● Issue - 5 ● July, 2025 ● Monthly ● Price Rs. 25/-


கோயில் காவலாளி போலீஸ் காவலில் மரணமடைந்த வழக்கு

## சிபிஐ விசாரணைக்கு மாற்றம்...



அஜித்குமார் குடும்பத்துக்கு வீட்டு மனை பட்டா, சகோதரருக்கு அரசு வேலை பணி ஆணை வழங்கல்



## பயணிகள் ரயில் கட்டணம் உயர்வு

பரமக்குடி – ராமநாதபுரம் இடையே

## ரூ.1,853 கோடியில் நான்கு வழிச் சாலை திட்டம்

# திருப்பூரில் முதல் கட்டமாக 18 சிற்றுந்து வழித்தடங்களை அமைச்சர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்தனர்










மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் புதிய விரிவான சிற்றுந்து திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில் 86 வழித்தடங்கள் கண்டறியப்பட்டு வடக்கு மாவட்டம் வடக்கு மாநகரம் புதிய பஸ் நிலையத்தில் முதல் கட்டமாக 18 சிற்றுந்து வழித்தடங்களை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ சாமிநாதன் அவர்களும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு கயல்விழி செல்வராஜ் அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் தா. கிறிஸ்துராஜ் அவர்களும் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் மாண்புமிகு மேயர் ந தினேஷ்குமார் கொடி அசைத்து துவக்கி வைத்தனர். தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் 4வது மண்டல தலைவர் இலா பத்மநாபன் வடக்கு மாநகர பொறுப்பாளர். ஈ தங்கராஜ் அவர்களும் துணை மேயர் MKM பாலசுப்ரமணியம் அவர்களும் மாவட்ட மாநகர நிர்வாகிகள் ஒன்றிய நகர பகுதி செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் மண்டலத் தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



# சான்றோர் குரல்

SAANDROR KURAL - TAMIL MONTHLY    தமிழ் மாத இதழ்

● குரல் - 5 ● இதழ் - 5 ● ஜூலை, 2025 ●தமிழ் மாத இதழ் ●விலை ரூ.25/-

●Volume-5 ●Issue-5 ●July,2025 ●Monthly ●Price Rs.25/-

நிறுவனர் / ஆசிரியர் / வெளியீட்டாளர்

**G.B. பச்சையப்பன்**

ஆலோசகர்கள்

நிதில் & கோ S.R.P. ராஜன்

பயில்வான் ரங்கநாதன்

R. கதிரவன்

மூத்த செய்தியாளர், பாலிமர் தொலைக்காட்சி.

நிர்வாக ஆசிரியர்கள்

R. பிரேம் சந்தர்

S.R. ரஞ்சித்

செய்தி வாசிப்பாளர், பாலிமர் தொலைக்காட்சி.

உதவி ஆசிரியர்கள்

R. ரிச்சர்ட் ராஜ்,

K. முகமது அலி,

M. பழனி,

L. லிங்கேஷ்வரன்,

D. கல்யாணசுந்தரம்,

S. சதீஷ்குமார்,

G.K. பாண்டியநேரு (தேனி)

K. குட்டிகிருஷ்ணன்,

நிருபர்கள்

V. நரேஷ்குமார் (செங்கல்பட்டு)

G. ராஜ்குமார் (விருதுநகர்)

P. ஆகாஷ் (சென்னை)

M. ஆகாஷ்குமார் (திருவண்ணாமலை)

S. ஸ்ரீனிவாசன் (காஞ்சிபுரம்)

K. தினேஷ் (மத்திய சென்னை)

M. தினேஷ் (திருப்பூர்)

புகைப்பட கலைஞர்கள்

ஏ. சங்கர்

VRJ Graphics பக்க வடிவமைப்பு: 90941 19636

நிர்வாக மேற்பார்வையாளர்கள்

P.அஜய் B.Com., - P.ஆகாஷ் B.Com.,

சட்ட ஆலோசகர்கள்

E. யோபு M.Com., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99417 56241)

D. நவீன் சந்தர் B.Sc.,BL, சென்னை உயர்நீதிமன்றம் (98942 30312)

D.K. பார்த்திபன் B.E., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99411 33979)

பதிவு அலுவலகம் :

நெ.E-44, ராஜா முத்தையாபுரம்,

ராஜா அண்ணாமலைபுரம், மந்தைவெளி, சென்னை - 028

நிர்வாக அலுவலகம்:

நெ.22/2, சி.பி.கோயில் தெரு, கச்சேரி ரோடு,

மயிலாப்பூர், சென்னை - 600004

தொடர்பு எண்: 044 - 48588401 / 9962235025


அனைத்து சட்ட விதிகளும்/ உரிமைகளும் சென்னை நீதிமன்றத்திற்குட்பட்டது.

## ஆசிரியர் கடிதம்...

# அரசு ஊழியர்களுக்கான திருமண முன்பணம் ரூ.5 லட்சமாக உயர்வு




அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான திருமண முன்பணம் ரூ.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அவர்களின் பிள்ளைகளுக்கான திருமண முன்பணம் அரசால் வழங்கப்படுகிறது. முன்னதாக கடந்த 1989ம் ஆண்டு, அரசு ஊழியர் அல்லது அவரது மகன் திருமணத்துக்கு ரூ.3 ஆயிரம், பெண் ஊழியர் அல்லது மகள் திருமணத்துக்கு ரூ.5 ஆயிரம் முன்பணமாக வழங்கப்பட்டது. அதன்பின், 1995ல் இத்தொகை ரூ.6 ஆயிரம் மற்றும் 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், சட்டப்பேரவையில் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் 110 விதியின்கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின், ''அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமது பணிக்காலத்தில் தேவையின் அடிப்படையில் திருமண முன்பணமாக இதுவரை பெண் ஊழியர்களுக்கு ரூ.10 ஆயிரம் மற்றும் ஆண்களுக்கு ரூ.6 ஆயிரம் வழங்கப்படுகிறது. இதனை பல மடங்கு உயர்த்தி அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் பொதுவாக ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்'' என அறிவித்தார்.

இதன்படி, திருமண முன்பணத்தை ரூ.5 லட்சமாக உயர்த்தி நிதித்துறை செயலர் உதயச்சந்திரன் அரசாணை வெளியிட்டுள்ளார். மேலும், இதற்கான வழிகாட்டுதலும் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி முன்பணமானது, அரசு ஊழியரின் 15 மாத அடிப்படைச் சம்பளம் அல்லது ரூ.5 லட்சம் இதில், எது குறைவோ அது வழங்கப்படும். ஓய்வுபெற 5 ஆண்டுகள் வரை இருக்கும் ஊழியர்கள் முன்பணம் பெறலாம்.

கணவன், மனைவி, பெற்றோர் அரசு ஊழியர்களாக இருப்பின், ஒரு குடும்பத்தில் ஒரு முறை மட்டுமே முன்பணம் பெற முடியும் என்பது உள்ளிட்ட வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளன.

அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமது பணிக்காலத்தில் தேவையின் அடிப்படையில் திருமண முன்பணமாக ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்ற தகவல் சான்றோர் குரல் மாத இதழின் சார்பாக ஆசிரியர் ஜி.பி. பச்சையப்பன் வாழ்த்துக்களை தெரிவித்தார்.



**G.B.பச்சையப்பன்**
தலைமை ஆசிரியர்

# மக்கள் இயக்கமாக மாறிய டிஜிட்டல் இந்தியா திட்டம்

## 10 ஆண்டுகள் நிறைவை ஒட்டி பிரதமர் மோடி பெருமிதம்



டிஜிட்டல் இந்தியா திட்டம் 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில் இத்திட்டம் மக்கள் இயக்கமாக மாறியுள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். கடந்த 2015ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி டிஜிட்டல் இந்தியா திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் வெற்றிகரமாக 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி தனது சமூக வலைதளப் பக்கத்தில் கூறியிருப்பதாவது: பத்து ஆண்டுகளுக்கு முன், இந்தியா மிகுந்த நம்பிக்கையுடன் அறியப்படாத பிரதேசத்தில் ஒரு துணிச்சலான பயணத்தை தொடங்கியது.

தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் இந்தியர்களின் திறனை சந்தேகித்து பல தசாப்தங்கள் கழிந்தாலும், நாங்கள் இந்த அணுகுமுறையை மாற்றி, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இந்தியர்களின் திறனை நம்பினோம், இது போலவே சமத்துவமின்மையை தொழில்நுட்பம் அதிகரிக்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொள்ளவில்லை.

இத்திட்டம் தற்போது இருப்பவர் இல்லாதவர் இடையிலான இடைவெளியை போக்கும் பாலமாக திகழ்கிறது. நோக்கம் சரியாக இருக்கும்போது குறைந்த அதிகாரம் கொண்டவர்களுக்கு அதிகாரம் அளிப்பதாக புதுமை திகழ்கிறது. அனைவருக்குமான அணுகுமுறைகள் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையில் அர்த்தமுள்ள மாற்றங்களை கொண்டு வந்துள்ளன.

பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரத்தின் 11 மடங்கு தூரத்துக்கு சமமான 42 லட்சம் கி.மீட்டருக்கும் அதிகமான ஆப்டிகல் ஃபைபர் கேபிள், தற்போது மிகவும் தொலைதூர கிராமங்களையும் இணைக்கிறது. இந்தியாவின் 5ஜி திட்டம் உலகில் வேகமான திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டத்தில் 2 ஆண்டுகளில் 4.81 லட்சம் அடிப்படை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதிவேக இணையம் நகர்ப்புற மக்களை மட்டுமல்ல, கல்வான் பள்ளத்தாக்கு, சியாச்சின், லடாக் உள்ளிட்ட ராணுவ நிலைகளையும் அடைந்துள்ளது.

இந்தியாவின் டிஜிட்டல் உள்கட்டமைப்பின் கீழ் இருக்கும் தளங்களான ஆதார், கோவின், டிஜிலாக்கர், பாஸ்ட்டேக், பிஎம். வாணி, ஒன் நேஷன் ஒன் சப்ஸ்கிரிப்ஷன் ஆகியவை இப்போது உலகளவில் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகின் மிகப்பெரிய தடுப்பூசி இயக்கத்தை கோவின் செயல்படுத்தி, 220 கோடிக்கும் அதிகமான சான்றிதழ்களை வழங்கியது. டிஜிலாக்கர் இப்போது 54 கோடி பயனர்களுக்கு சேவை செய்கிறது.

775 கோடிக்கும் அதிகமான ஆவணங்களை வழங்குகிறது. டிஜிட்டல் இந்தியா ஒரு மக்கள் இயக்கமாக மாறியுள்ளது, மேலும் தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதற்கும், புதுமை கண்டுபிடிப்புகளில் இந்தியாவை உலகின் நம்பகமான கூட்டாளியாக மாற்றுவதற்குமான மையமாக விளங்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நிர்மலா சீதாராமன்: நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘‘டிஜிட்டல் இந்தியா வெறும் அரசுத் திட்டமாக மட்டும் திகழவில்லை. மாறாக மக்கள் இயக்கமாகவும் மாறியுள்ளது. நாட்டின் தொலைதூரப் பகுதிகளுக்கு இணைய வசதியை கொண்டு செல்வது முதல், அரசு சேவைகளை ஆன்லைனில் கிடைக்கச் செய்வது வரை, பிரதமர் மோடி அரசின் 'டிஜிட்டல் இந் திட்டம் நாடு முழுவதும் உள்ள டிஜிட்டல் இடைவெளியை உண்மையிலேயே குறைத்துள்ளது’’ என்று கூறியுள்ளார்.

வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தனது பதிவில், ‘‘யுபிஐ, நேரடிப் பணப் பரிமாற்றம் போன்ற பல முயற்சிகளால், நாடு டிஜிட்டல் நிர்வாகத்தில் இருந்து உலகளாவிய டிஜிட்டல் தலைமையை நோக்கி நகர்கிறது’’ என்று கூறியுள்ளார். மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி தனது பதிவில், “மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM) மூலம் விவசாயத்தில் டிஜிட்டல் இந்தியா திட்டம் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது நாடு முழுவதும் நுகர்வோர், விவசாயிகள் நேரடியாக இணைய உதவுகிறது. 1,400க்கும் மேற்பட்ட மண்டிகளில் ரூ.4 லட்சம் கோடி வர்த்தகம் மற்றும் 1.7 கோடி விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதன் மூலம், இதன் தாக்கம் நிதர்சனமானது’’ என்று கூறியுள்ளார்.



# பெண்களுக்கான வாக்குறுதிகளை நிறைவேற்றும்

## தமிழகம் உள்ளிட்ட 18 மாநிலங்கள்: செலவு என்ன?

பெண்களை மையப்படுத்தி தேர்தல் வாக்குறுதிகளை தமிழகம் உள்ளிட்ட 18 மாநிலங்கள் நிறைவேற்றி வருகின்றன. இதற்கான செலவு 2025 26 நிதியாண்டில் ரூ.1 லட்சம் கோடியை தாண்டும் என கிரிசில் ரேட்டிங்ஸ் எனும் தனியார் நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

ஒவ்வொரு முறை தேர்தலிலும் போட்டியிடும் அரசியல் கட்சிகள் பெண்களுக்கான வாக்குறுதிகளை அதிகரிப்பது வழக்கமாகி வருகிறது. இதன் பின்னணியில் பெண்களின் வாக்குகளால் ஆட்சியை கைப்பற்ற முடியும் என்பது நம்பிக்கையாக உள்ளது. ஆண்களை விட பெண்கள் அதிகமாக வாக்குப்பதிவு செய்ய முன்வருவதும் காரணமாக உள்ளது.

இந்தச் சூழலில் பெண்களுக்கு அளிக்கப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்ற அதன் அரசுகளுக்கு ஆகும் செலவு குறித்து கிரிசில் ரேட்டிங்ஸ் எனும் தனியார் நிறுவனம் ஒரு மதிப்பிட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், தமிழகம் உள்ளிட்ட 18 மாநிலங்களுக்கு நடப்பு ஆண்டின் நிதிச் செலவு ரூ.1 லட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் தமிழகமும் இடம்பெற்றுள்ளது.

இத்துடன் உத்தரப் பிரதேசம், பிஹார், ஜார்க்கண்ட், பஞ்சாப், ஹரியானா, மகாராஷ்டிரா, கோவா, குஜராத், கர்நாடகா, தெலங்கானா, ராஜஸ்தான், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம், கேரளா, ஆந்திரா, சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. இந்த மாநிலங்களில் ஆட்சியில் இருக்கும் கட்சிகள் தேர்தல் சமயத்தில் பெண்களுக்கான வாக்குறுதிகளை அளித்திருந்தன. எனவே, இந்த 18 மாநிலங்களின் மதிப்பீட்டு அறிக்கை வெளியாகி உள்ளது.

இது குறித்து கிரிசில் ரேட்டிங்ஸ் நிறுவனத்தின் மூத்த இயக்குநர் அனுஜ் சேத்தி கூறுகையில், ‘இந்த 18 மாநிலங்கள் 2019 மற்றும் 2024 நிதியாண்டுக்கு இடையில் சமூகத் துறை திட்டங்களுக்காக தங்கள் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 1.40 முதல் 1.60 சதவிகிதம் வரை செலவிட்டுள்ளன. அவர்களின் பட்ஜெட் மதிப்பீடுகளின் படி, நடப்பு நிதியாண்டில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 2 சதவீதம் செலவிட முடியும். இதன் காரணமாக அவர்களின் மூலதனச் செலவு பாதிக்கப்படலாம்.

2024 நிதியாண்டில் இருந்ததை விட 2025 2026 நிதியாண்டில் சமூக நலச் செலவு சுமார் ரூ.2.3 லட்சம் கோடி அதிகரிக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இதில் சுமார் 1 லட்சம் கோடி ரூபாய் பெண்களுக்கு நேரடி மானியமாக வழங்கப்படவுள்ளது. இது முக்கியமாக தேர்தல் வாக்குறுதிகளுடன் தொடர்புடையதாக இருக்கும். மீதமுள்ள ரூ.1.3 லட்சம் கோடி அதிகரிப்பு முக்கியமாக பின் தங்கிய வகுப்பினருக்கு நிதி மருத்துவ உதவி மற்றும் சில குழுக்களுக்கு சமூக பாதுகாப்பு ஓய்வூதியமாக இருக்கும்” என்று அனுஜ் சேத்தி கூறியுள்ளார்.

## பரமக்குடி - ராமநாதபுரம் இடையே

# ரூ.1,853 கோடியில் நான்கு வழிச் சாலை திட்டம்

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

பரமக்குடி- ராமநாதபுரம் இடையே ரூ.1,853 கோடியில் 46.7 கி.மீ. தொலைவுக்கு 4 வழிச்சாலை அமைக்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் டெல்லியில் நேற்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை (இஎல்ஐ) திட்டம், ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் புதுமைத் திட்டம்(ஆர்டிஐ), தேசிய விளையாட்டுக் கொள்கை, தமிழகத்தில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

4 முக்கிய முடிவுகள்.. ரூ.3 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையில் இந்த திட்டங்கள் தொடங்கப்பட உள்ளன. பிரதமர் மோடியின் தலைமையில் எடுக்கப்பட்ட இந்த 4 முக்கிய முடிவுகள், இளைஞர்களை மேம்படுத்துதல், புதுமைகளை ஆதரித்தல், விளையாட்டுகளை மேம்படுத்துதல், உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன. தமிழகத்தில் பரமக்குடி, ராமநாதபுரம் இடையே ரூ,1,853 கோடியில் 4 வழிச்சாலைத் திட்டம் அமைய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது, மதுரை, பரமக்குடி, ராமநாதபுரம், மண்டபம், ராமேசுவரம், தனுஷ்கோடி இடையிலான இரு வழி தேசிய நெடுஞ்சாலை எண்.87, அதனுடன் தொடர்புடைய மாநில நெடுஞ் சாலைகளை இணைக்கும் வகையில் இந்த 4 வழிச் சாலை அமைக்கப்பட உள்ளது.



இந்த மேம்படுத்தப்பட்ட வழித்தடம், மதுரை, ராமேசுவரம் ஆகிய 2 முக்கிய ரயில் நிலையங்கள், மதுரை விமான நிலையம், பாம்பன், ராமேசுவரம் துறைமுகங்கள் ஆகியவற்றுடன் இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் பல்முனை போக்குவரத்து ஒருங்கிணைப்பை உறுதி செய்யும். இந்த திட்டம் நிறைவடைந்தவுடன், இப்பகுதியில் பொருளாதார வளர்ச்சிமேம்படுவதுடன், வழிபாட்டு மற்றும் பொருளாதார மையங்களுக்கு இடையிலான இணைப்பையும் வலுப்படுத்த உதவும். ராமேசுவரம்,தனுஷ்கோடியில் சுற்றுலாவை மேம்படுத்தவும் இது உதவும்.

வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை: மேலும், ரூ.1.07 லட்சம் கோடியில் வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டமும் அமல்படுத்தப்பட உள்ளது. வேலைவாய்ப்பு, உற்பத்தி துறைகளை மேம்படுத்தும் நோக்கில் இது கொண்டு வரப்படவுள்ளது. இதன்மூலம் முதல்முறையாக வேலையை உருவாக்கும் முதலாளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். கடந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டபோது அறிவிக்கப்பட்ட இந்த திட்டத்தை தற்போது அமலுக்கு கொண்டு வருகிறோம்.

ஆராய்ச்சி மேம்பாடு: ஆர்டிஐ எனப்படும் ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் புதுமைத் திட்டம் ரூ.1 லட்சம் கோடியில் அமல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டம் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். மேலும், ஆராய்ச்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட திட்டங்களை உறுதியான தயாரிப்புகளாக மாற்றுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

நாட்டில் விளையாட்டுத் துறையை அடுத்த 10 ஆண்டுகளில் வளர்ச்சி மிகுந்த துறையாக மாற்ற அரசு உறுதி பூண்டுள்ளது. அதற்காக தேசிய விளையாட்டுக் கொள்கை2025 அறிமுகம் செய்யப்பட உள்ளது. இதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த விரிவான கொள்கை, அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை வீரர், வீராங்கனைகளின் விளையாட்டுத் திறமையை வளர்ப்பது, பயிற்சியை மேம்படுத்துவது, நாட்டின் விளையாட்டு உட்கட்டமைப்பை வலுப் படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாறு மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

3.5 கோடி வேலைவாய்ப்பு: வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை (இஎல்ஐ) திட்டத்தின் கீழ் 2 ஆண்டுகளில் 3.5 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த திட்டத்தின் கீழ் உற்பத்தித்துறையில் சேரும் இளைஞர்களுக்கு மாதம்தோறும் ரூ.15 ஆயிரம் ஊதியமாக கிடைக்கும். அதேநேரத்தில் வேலைவாய்ப்பை உருவாக்கும் முதலாளிகளுக்கு 2 ஆண்டுகளுக்கு ஊக்கத்தொகையை மத்திய அரசு வழங்கும் என்று தெரிய வந்துள்ளது.

## வேலைவாய்ப்புடன் கூடிய

# ஊக்கத் தொகை திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத் தொகை திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கிய திட்டங்கள் தொடர்பாக மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் இன்று செய்தியாளர்களுக்கு விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியது: “வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத் தொகை திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. புதிதாக பணியில் சேர உள்ளவர்களுக்கும், அவர்களுக்கு பணி வாய்ப்பை வழங்கும் நிறுவனங்களுக்கும் ஆதரவு அளிக்கக் கூடியதாக இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

4.1 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு மற்றும் பிற வாய்ப்புகளை எளிதாக்கும் பிரதமரின் ஐந்து திட்டங்களின் தொகுப்பின் ஒரு பகுதியாக இந்த திட்டம் செயல்படுத்தப்படும். வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத் தொகை திட்டத்துக்கு 202425 மத்திய பட்ஜெட்டில் ரூ.2 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி, முதல் முறையாக பணிக்கு சேருபவர்களை மையமாகக் கொண்டது. இரண்டாவது பகுதி, உரிமையாளர்களை மையமாகக் கொண்டது:

முதல் முறை பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை: தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் பதிவு செய்த முதல் முறை பணியாளர்களுக்கு இரண்டு தவணைகளில் ரூ.15,000 வரை ஒரு மாத தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஊதியத்தை அரசு வழங்கும். ரூ.1 லட்சம் வரை ஊதியம் பெறும் பணியாளர்கள் இதற்கு தகுதி பெறுவார்கள்.

உரிமையாளர்களுக்கு ஆதரவு: அதிகபட்சம் ரூ.1 லட்சம் வரை ஊதியம் பெறும் பணியாளர்களைக் கொண்ட நிறுவன உரிமையாளர்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகை வழங்கப்படும். பணியாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒவ்வொரு பணியாளருக்கும் மாதத்திற்கு ரூ.3000 வரை உரிமையாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும். இந்த ஊக்கத் தொகை 2 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். அதேநேரத்தில், உற்பத்தித் துறையைப் பொறுத்தவரை, ஊக்கத் தொகை 3வது மற்றும் 4வது ஆண்டுகளுக்கும் நீட்டிக்கப்படும். இந்தத் திட்டத்தின் நன்மைகள் 2025 ஆகஸ்ட் 1 முதல் 2027 ஜூலை 31 வரை உருவாக்கப்படும் வேலைகளுக்குப் பொருந்தும்.

4 வழிச்சாலை திட்டத்துக்கு ஒப்புதல்: தமிழ்நாட்டில் பரமக்குடி ஸ்ரீ ராமநாதபுரம் இடையே 46.7 கி.மீ தொலைவிற்கு நான்கு வழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டம் ரூ.1,853 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

தற்போது, மதுரை, பரமக்குடி, ராமநாதபுரம், மண்டபம்,



ராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி இடையிலான இருவழி தேசிய நெடுஞ்சாலை எண் 87, அதனுடன் தொடர்புடைய மாநில நெடுஞ்சாலைகளை இணைக்கும் வகையில் இந்த நான்கு வழிச் சாலை அமைக்கப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் பரமக்குடி முதல் ராமநாதபுரம் வரையிலான தேசிய நெடுஞ்சாலை எண்87 இனி நான்கு வழிச் சாலையாக மேம்படுத்தப்படும். இதன் மூலம் இந்த வழித்தடத்தில் போக்குவரத்து நெரிசலுக்கு நிரந்தர தீர்வு காண முடியும்.

இந்த மேம்படுத்தப்பட்ட வழித்தடம் 2 முக்கிய ரயில் நிலையங்கள் (மதுரை மற்றும் ராமேஸ்வரம்), 1 விமான நிலையம் (மதுரை) மற்றும் 2 சிறிய துறைமுகங்கள் (பாம்பன் மற்றும் ராமேஸ்வரம்) ஆகியவற்றுடன் இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் பல்முனை போக்குவரத்து ஒருங்கிணைப்பை உறுதி செய்யும். இந்தப் பகுதிகள் முழுவதும் சரக்கு மற்றும் பயணிகளின் விரைவான போக்குவரத்தை எளிதாக்கும்.

பரமக்குடி ராமநாதபுரம் இடையே அமைக்கப்பட உள்ள இந்த 4 வழிச்சாலைத் திட்டம் நிறைவடைந்தவுடன், இந்தப் பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சி மேம்படுவதுடன் வழிபாட்டு மற்றும் பொருளாதார மையங்களுக்கு இடையிலான இணைப்பையும் வலுப்படுத்த உதவிடும். ராமேஸ்வரம், தனுஷ்கோடிக்கு சுற்றுலாவை மேம்படுத்தவும் இது உதவிடும். மேலும் வர்த்தகம் மற்றும் தொழில்துறை மேம்பாட்டிற்கான புதிய வாய்ப்புகளுக்கும் இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டம் 8.4 லட்சம் நேரடி மனித வேலை நாட்களையும் 10.45 லட்சம் மறைமுக மனித வேலை நாட்களையும் உருவாக்கும். மேலும் இதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளர்ச்சி, மேம்பாடு மற்றும் வளத்திற்கான வாய்ப்புகளும் உருவாகும்” என்று அவர் தெரிவித்தார்.

## கோயில் காவலாளி போலீஸ் காவலில் மரணமடைந்த வழக்கு

# சிபிஐ விசாரணைக்கு மாற்றம்...

**◆ இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும், எங்கும், யாராலும் நடந்துவிடக் கூடாது ◆ முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை**

கோயில் காவலாளி அஜித்குமார் போலீஸ் காவலில் மரணமடைந்த வழக்கு சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது. இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும், எங்கும், யாராலும் நடந்துவிடக் கூடாது என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மதுரை மாவட்டம் திருமங்கலத்தைச் சேர்ந்தவர் சிவகாமி (73). இவரது மகள் நிகிதா (48). இருவரும் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் பத்திரகாளியம்மன் கோயிலுக்கு சென்று சாமி கும்பிட சென்றனர். கோயிலுக்கு வந்ததும் காரை கோயில் செக்யூரிட்டி அஜித்குமாரிடம் பார்க்கிங்கில் நிறுத்தும்படி கூறியுள்ளார்.



அவர் தனக்கு கார் ஓட்ட தெரியாது என்று கூறியவர் தனது நண்பரை வரவழைத்து காரை நிறுத்தியுள்ளார். பின்னர் சாமி தரிசனம் முடிந்து திரும்பியவர், காரில் உள்ள பையில் 10 சவரன் நகை இருந்ததை காணவில்லை என்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து திருப்புவனம் போலீசில் புகார் கொடுத்துள்ளார். மானாமதுரை டிஎஸ்பி சண்முகசுந்தரத்தின் சிறப்பு தனிப்படை போலீசார் 6 பேர் சென்று காவலாளி அஜித்குமார், அவரது நண்பர் மற்றும் தம்பி ஆகியோரை அழைத்து விசாரித்துள்ளனர். பின்னர், அவர்களை அனுப்பிவிட்டு அஜித்குமாரிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

அப்போது போலீசார் கோயிலுக்கு பின்புறம் உள்ள மாட்டு தொழுவத்தில் வைத்து அடித்துள்ளனர். அதில் அவருக்கு வலிப்பு ஏற்பட்டுள்ளது. அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் அஜித்குமார் உயிரிழந்துள்ளார். போலீசார் அடித்ததில்தான் அஜித்குமார் இறந்தார் என்று தெரியவந்ததால், அவரை போலீசார் கொலை வழக்குப்பதிவு செய்து 5 காவலர்களை கைது செய்தனர். வாகனம் ஓட்டியவர் மீது தவறு இல்லாததால் அவரை சஸ்பெண்ட் மட்டும் செய்தனர். இதற்கிடையே சிவகங்கை மாவட்ட எஸ்பி ஆசீஸ் ராவத் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார். டிஎஸ்பி சண்முகசுந்தரம், சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில், கடந்த 28.6.2025 அன்று வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அஜித்குமார் என்பவர், திருப்புவனம் காவல் நிலையத்தில் மர்மமான முறையில் மரணம் அடைந்தார். விசாரணையின் போது காவலர்கள் நடத்திய தாக்குதல்தான் அவரது மரணத்துக்கு காரணம் என்பதை அறிந்ததும் மிகவும் வேதனையடைந்தேன். இது யாராலும் நியாயப்படுத்தப்பட முடியாத, காரணம் சொல்லி தப்பிக்க முடியாத செயல்.

இந்த சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட 6 காவலர்கள் உடனடியாக சம்பவம் நடந்த அன்றே பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இத்தகைய வழக்குகளில் பின்பற்றப்பட வேண்டிய சட்ட நடைமுறைகளின்படி, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. நேற்று முன்தினம் 5 காவலர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு விசாரணை சிபிசிஐடி பிரிவுக்கும் மாற்றப்பட்டது. நேற்று சம்பந்தப்பட்ட மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். துணை கண்காணிப்பளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இப்படி சட்டபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுத்துக்கப்பட்டு வருகிறது.

துயர மரணத்தை அடைந்துள்ள அஜித்குமாரின் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு நான் பேசினேன். நடந்த துயரச் சம்பவத்திற்கு எனது வருத்தத்தை அவர்களிடம் தெரிவித்தேன். நியாயமான, ஒளிவுமறைவற்ற, எவ்வித பாரபட்சமுமற்ற விசாரணை மேற்கொள்ளப்படும். இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அஜித்குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு நியாயம் கிடைத்திட வழிவகை செய்யப்படும். சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை, இவ்வழக்கில் சிபிசிஐடி தனது விசாரணையை தொடரலாம் எனவும் தெரிவித்துள்ளது.

# அஜித்குமார் குடும்பத்துக்கு வீட்டு மனை பட்டா, சகோதரருக்கு அரசு வேலை பணி ஆணை வழங்கல்



போலீஸ் விசாரணையின்போது உயிரிழந்த திருப்புவனம் இளைஞர் அஜித்குமார் சகோதரர் நவீனுக்கு அரசு வேலைக்கான பணி நியமன ஆணையை அமைச்சர் பெரியகருப்பன் இன்று வழங்கினார். மேலும், அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவையும் அவர் வழங்கினார்.

முன்னதாக நேற்று அஜித்குமாரின் தாய், சகோதரரிடம் தொலைபேசியில் பேசிய முதல்வர் ஸ்டாலின், அது தொடர்பான வீடியோவையும் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். அதில், "திருப்புவனம் இளைஞருக்கு நடந்த கொடுமை யாருக்கும் நடக்கக் கூடாதது, யாராலும் நியாயப்படுத்த முடியாத தவறு. கடமை தவறிக் குற்றம் இழைத்தவர்களுக்கு நிச்சயம் இந்த அரசு தண்டனை பெற்றுத் தரும்! பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதலாக நிற்கும்!" என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இன்று (ஜூலை 2) காலையில், அமைச்சர் பெரியகருப்பன் அஜித்குமாரின் சகோதரர் நவீனுக்கு அரசு வேலைக்கான பணி நியமன ஆணையை வழங்கியதோடு அஜித்குமார் குடும்பத்தினரிடம் இலவச வீட்டு மனைக்கான பட்டாவையும் வழங்கினார். நவீனுக்கு ஆவின் நிறுவனத்தில் வேலை வழங்கப்பட்டுள்ளதாக தகவல் நிலவுகிறது.

பின்னர் பேசிய அமைச்சர் பெரியகருப்பன், "அஜித்குமார் குடும்பத்துக்கு உதவி செய்ய அரசு உத்தரவு பிறப்பிருந்தது. அதன்படி, அஜித்குமாருக்கு அவரது கல்வித் தகுதிக்கு ஏற்ப அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது. கூடவே அஜித்குமார் குடும்பத்துக்கான இலவச வீட்டு மனைப் பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது." என்றார்.

நடந்தது என்ன? சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயிலில் காவலாளி அஜித்குமார். கோயிலுக்கு வந்த பெண்ணின் காரில் இருந்த 9 பவுன் நகை காணாமல் போனது தொடர்பாக விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு போலீஸார் தாக்கியதில் உயிரிழந்தார். இதையடுத்து வழக்கு விசாரணை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது.

பின்னர் கொலை வழக்காகப் பதிவு செய்யப்பட்டு, அஜித்குமாரை தாக்கிக் கொலை செய்ததாக தனிப்படை காவலர்கள் கண்ணன், ஆனந்த், பிரபு, ராமச்சந்திரன், சங்கர மணிகண்டன் ஆகியோர் கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டனர். இதனிடையே, மானாமதுரை டிஎஸ்பி சண்முகசுந்தரம் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும், சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது

தொடர்ந்த இந்த வழக்கில் அரசுக்கு உயர் நீதிமன்றம் சரமாரி கேள்வி எழுப்பியது. இந்நிலையில் இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின். மேலும், காவலர்கள் தாக்குதலில் உயிரிழந்த அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு முதல்வர் செல்போனின் ஆறுதல் தெரிவித்தார்.

இருப்பினும், இந்த சம்பவத்தில் காவல் துறையைச் சேர்ந்த ஐவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கின் விசாரணை குறித்து, எந்தவிதமான ஐயப்பாடும் எழுப்பப்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு, இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றிடுமாறு உத்தரவிட்டுள்ளேன். சி.பி.ஐ. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை தமிழ்நாடு அரசு வழங்கும். காவல்துறையினர் தங்களது விசாரணையின்போது மனித உரிமையைக் காக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். இதுபோன்ற மீறல் சம்பவங்களை நான் எப்போதும் ஏற்றுக்கொள்வது இல்லை.

திருப்புவனத்தில் சில காவலர்கள் செய்த செயல், மன்னிக்க முடியாதது. இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்துவிடக் கூடாது என்பதை எச்சரிக்கையாகவே சொல்ல விரும்புகிறேன். தங்களுடைய பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைத்திடும் என நம்பி காவல்துறையை நாடி வரும் பொதுமக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றிடும் வகையில் காவல்துறை எப்போதும் செயல்பட வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. தமிழக அரசு தானாகவே முன்வந்து இந்த வழக்கை சிபிஐக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளதற்கு, அஜித்குமாரின் குடும்பத்தினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

## விசாரணையின்போது கோயில் காவலாளி மரணம்

# காவலர்கள் 6 பேர் சஸ்பெண்ட்



### நடந்தது என்ன?

நகை திருட்டு புகாரின் பேரில் தனிப்படை போலீஸார் நடத்திய விசாரணையின்போது மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயில் காவலாளி உயிரிழந்தார். இது தொடர்பாக தனிப் படை காவலர்கள் 6 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரத்தைச் சேர்ந்தவர் பாலகுரு மகன் அஜித்குமார் (27). திருமணமாகாத இவர், அங்குள்ள பத்ரகாளியம்மன் கோயிலில் தனி யார் நிறுவன ஒப்பந்த காவலாளி யாகப் பணியாற்றி வந்தார். இந்நிலை யில், கோயிலுக்கு காரில் வந்த நிகிதா என்பவரது நகைகள் திருடுபோய் விட்டன. இது தொடர்பான புகாரின் பேரில் அஜித்குமார் உள்ளிட்ட சிலரை திருப்புவனம் போலீஸார் அழைத்துச் சென்று விசாரித்தனர்.

பின்னர், அஜித்குமாரை நேற்று முன்தினம் விடுவித்தனர். வெளியே வந்த அவரை மீண்டும் மானாமதுரை உட்கோட்ட தனிப்படை போலீஸார் அழைத்துச் சென்று விசாரித்தனர். அப்போது, உடல்நலம் பாதிக்கப்பட்ட தாக கூறி அஜித்குமாரை மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அவரை பரிசோதித்த டாக்டர்கள், அவர் ஏற் கெனவே இறந்துவிட்டதாகத் தெரிவித் தனர். பின்னர், பிரேதப் பரிசோதனைக் காக அஜித்குமாரின் உடலை மதுரை அரசு மருத்துவமனைக்கு போலீஸார் கொண்டு சென்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக திருப் புவனம் போலீஸார் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொண் டனர். இதற்கிடையில், மானாமதுரை உட்கோட்ட தனிப்படையைச் சேர்ந்த காவலர்கள் பிரபு, கண்ணன், சங் கரமணிகண்டன், ராஜா, ஆனந்த், ராமச்சந்திரன் ஆகிய 6 பேரை பணி யிடை நீக்கம் செய்து காவல் கண் காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் உத்தர விட்டார். மேலும், சம்பவம் தொடர்பாக திருப்புவனம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் வெங்கடேஷ் பிரசாத் நேற்று விசாரணை நடத்தினார்.

இந்நிலையில், பிரேதப் பரிசோதனை செய்வதற்கு அஜித்குமாரின் உறவினர் கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அஜித்குமாரை கொன்ற காவலர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும், குடும்பத்தில் ஒரு வருக்கு அரசு வேலை வழங்க வேண் டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

அப்போது, அஜித்குமாரின் தாயார் மாலதி, சகோதரர் நவீன்குமார் ஆகியோரை திமுக பிரமுகர் ஒருவரது காரில் ஏற்றி, உடலை வாங்குவதற் காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முற்பட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கிராம மக் கள் மற்றும் அதிமுக எம்எல்ஏ செந் தில்நாதன் தலைமையிலான கட்சி யினர் மறியலில் ஈடுபட்டனர்.

அவர்களை சமாதானப்படுத்திய போலீஸார், அஜித்குமாரின் தாயார், சகோதரரை காவல் துறை காரில் ஏற்றி மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். வீடியோ பதிவுடன் பிரேதப் பரிசோதனை செய் யப்பட்டு, அஜித்குமார் உடல் குடும்பத் தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**தலைவர்கள் கண்டனம்:** மடப் புரத்தில் உள்ள கோயில் காவலாளி உயிரிழந்த சம்பவத்துக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கண் டனம் தெரிவித்துள்ளனர்.

**மத்திய இணையமைச்சர் எல்.முரு கன்:** காவல் துறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய முதல்வர் கண்டும் காணாமல் இருப்பதால் அப் பாவி மக்கள் உயிரிழக்கின்றனர். மடப் புரம் சம்பவத்துக்கு முதல்வர் என்ன சொல்லப் போகிறார்?

**அதிமுக பொதுச் செயலாளர் பழனி சாமி:** ஒருவர் தவறு செய்ததாக காவல் துறை கருதினால், கைது செய்து நீதி மன்றத்தில் ஒப்படைத்து, உரிய சட்ட நெறிமுறையைப் பின்பற்ற வேண்டும். சட்டத்தை கைகளில் எடுத்துக்கொள் ளக் கூடாது. தனது நேரடிக் கட்டுப்பாட் டில் உள்ள காவல் துறையைக்கூட நிர்வகிக்கத் தெரியாத முதல்வருக்கு கடும் கண்டனம் தெரிவித்துக் கொள் கிறேன். மாவட்ட நீதிபதி தலைமையி

# அஜித்குமார் என்ன தீவிரவாதியா?

‘மடப்புரம் கோயில் காவலரை சாதாரண சந்தேக வழக்கில் விசாரணைக்கு அழைத்துச் சென்று தாக்கியது ஏன்? அவர் என்ன தீவிரவாதியா?’ என உயர் நீதிமன்றம் மதுரை அமர்வு கேள்வி எழுப்பியுள்ளது.

உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரியகிளாட் முன்பு அதிமுக வழக்கறிஞர்கள் மாரீஸ்குமார், ராஜராஜன், பாஜக வழக்கறிஞர் அருண் சுவாமிநாதன் ஆகியோர் இன்று (ஜூன் 30) காலை நேரில் ஆஜராகி, மடப்புரம் காளி கோயில் காவலர் அஜித்குமார் போலீஸ் காவலில் இறந்த விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரித்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அப்போது அவர்கள், ‘மடப்புரம் காளி கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வந்த பெண் ஒருவரின் காரில் இருந்த நகைகள் திருடப்பட்டதாக திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்தப் புகாரின் அடிப்படையில், கோயில் காவலரான அஜித்குமாரை போலீஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். விசாரணையின்போது போலீஸார் அஜித்தை கடுமையாக தாக்கியுள்ளனர். இதில் அவர் உயிரிழந்தார்.

இதுபோன்ற சட்டவிரோத காவல் மரணங்களை ஏற்க முடியாது. இது தொடர்பாக உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரித்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்’ என்றனர்.

## காவல் துறைக்கு உயர் நீதிமன்றம் சரமாரி கேள்வி

பின்னர் நீதிபதிகள், “கடந்த 4 ஆண்டுகளில் 24 காவல் மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகிறது. அஜித்குமார் என்ன தீவிரவாதியா? ஆயுதம் ஏந்தி தாக்கினால், தற்காப்புக்காக போலீஸார் தாக்குதல் நடத்துவதை ஏற்கலாம். அவ்வாறு இல்லாமல் சாதாரண சந்தேக வழக்கில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவரை தாக்கியது ஏன் எனத் தெரியவில்லை. இவ்விவகாரம் தொடர்பாக மனு தாக்கல் செய்தால் விசாரித்து உத்தரவு பிறப்பிக்கப்படும்” என்றனர்.

இதையடுத்து, மடப்புரம் கோயில் காவலர் மரணம் வழக்கு தொடர்பாக உரிய விசாரணை நடத்தவும், போலீஸார் மீது கொலை வழக்கு பதிவு செய்யவும் கோரி அதிமுக வழக்கறிஞர் பிரிவு மாநில துணைச் செயலாளர் மாரீஸ்குமார் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நாளை (ஜூலை 1) விசாரணைக்கு வருகிறது.

முன்னதாக, நகை திருட்டு புகாரின் பேரில் தனிப் படை போலீஸார் நடத்திய விசாரணையின்போது மடப் புரம் பத்ரகாளியம்மன் கோயில் காவலாளி உயிரிழந்தார். இது தொடர்பாக தனிப்படை காவலர்கள் 6 பேர் பணி யிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

லான குழு விசாரணை நடத்தி, உயிரிழப்புக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண் டும். இறந்தவர் குடும்பத் துக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

**தமிழக பாஜக தலை வர் நயினார் நாகேந் திரன்:** திமுக ஆட்சியில் காவல் நிலையத்துக்கு வருவோரின் உயிர்களுக் கு பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியுள் ளது. காவல் துறையின் அராஜக போக்குக்கு முற் றுப்புள்ளி வைக்க வேண் டும்.

**பாமக தலைவர் அன் புமணி ராமதாஸ்:** சாத் தான்குளம் படுகொலை போல, மடப்புரம் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதற்காக காவல் துறையும், முதல் வரும் தலைகுனிய வேண் டும். இச்சம்பவத்துக்கு பொறுப்பேற்று முதல்வர் பதவி விலக வேண்டும்.

தமிழக பாஜக முன் னாள் தலைவர் அண்ணா மலை: பாலியல் குற் றங்களில் ஈடுபடும், போதைப் பொருட்கள் விற்பனை செய்யும்

திமுகவினர் யாரும் காவல் துறையால் தாக் கப்படுவதில்லை. சிறிய குற்றங்களில் விசா ரணைக்கு அழைத்துச் செல்லப்படும் அப்பாவி களைக் காவல் துறை கடுமையாகத் தாக்கு வது அதிகரித்துள்ளது. 2022ம் ஆண்டிலிருந்து 23 பேர் காவல் துறை விசாரணையின்போது உயிரிழந்துள்ளனர். ஆனால், முதல்வர் எந் தக் கவலையுமின்றி இருக்கிறார்.

இதே போல, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி. தினகரன், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, சீமான், தவெக பொதுச் செயலா ளர் என்.ஆனந்த் உள் ளிட்டோரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.





**மடப்புரத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட அஜித்குமாரின் உறவினர்கள் மற்றும் கிராம மக்கள்.**

## இதுவரை 41 லட்சம் மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்

# மாணவர்களின் வெற்றிதான் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் வெற்றி

### ‘வெற்றி நிச்சயம்’ என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு




நான் முதல்வன் திட்டத்தால் இதுவரைக்கும் 41 லட்சம் மாணவ - மாணவியர் பயனடைந்திருக்கிறார்கள். நல்ல வேலைவாய்ப்புகளை பெற்று உயர்ந்திருக்கிறார்கள். மாணவர்களின் வெற்றிதான் நான் முதல்வன் திட்டத் தின் வெற்றி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமையுடன் கூறினார். ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடந்த ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூன்றாண்டு வெற்றி விழாவில் கலந்துகொண்டு, ‘வெற்றி நிச்சயம்’ திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: ‘சக்சஸ்’! இதை நோக்கிதான் வாழ்க்கையில் எல்லோரும் உழைக்கிறோம். அப்படி ‘சக்சஸ்புல்’ மாணவர்களை உருவாக்கக்கூடிய ஒரு ‘சக்சஸ்புல்’ திட்டத்திற்கான உண்மையான ‘சக்சஸ் மீட்’ தான் இந்த வெற்றி விழா. அதுமட்டுமல்ல, “வெற்றி நிச்சயம்” என்று மற்றொரு புதிய முயற்சிக்கான தொடக்க விழாவும் கூட. ‘நான் முதல்வன்’ திட்டம் உருவாக்கப்பட்டது. அதை உருவாக்கியது திராவிட மாடல் அரசும், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும்தான் என்று என்னால் நெஞ்சை நிமிர்த்தி பெருமையோடு சொல்ல முடியும்.

இன்றைக்கு வரலாறு காணாத வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்திருக்கிறது. ‘தமிழ்நாட்டுக்கு வந்தால், திறமையான இளைஞர்கள் இருக்கிறார்கள்‘ என்ற நம்பிக்கையோடு ஏராளமான நிறுவனங்கள் தொடர்ந்து வருவார்கள். நீங்கள் அவர்களுக்கான நம்பிக்கை மட்டுமல்ல; நீங்கள்தான் தமிழ்நாட்டின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையோடுதான் ‘நான் முதல்வன்’ என்று இந்த திட்டத்திற்கு நான் பெயர் வைத்தேன். என் நம்பிக்கையை காப்பாற்றும் உங்கள் எல்லோருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்து களையும், பாராட்டுகள்.

நான் முதல்வன் திட்டத்தால் இதுவரைக்கும் 41 லட்சம் மாணவ - மாணவியர் பயனடைந்திருக்கிறார்கள். நல்ல வேலைவாய்ப்புகளை பெற்று உயர்ந்திருக்கிறார்கள். ‘அப்ஸ்கில்’ க்காக நீங்கள் அதிகம் பணம் கட்டி எந்த கோச்சிங் சென்டருக்கும் செல்ல வேண்டியதில்லை. உங்கள் காலேஜ் கேம் பஸிலேயே வளர்ந்து வரும் நவீன தொழில்துறைக்கு ஏற்றவகையில், தொழில் நுட்ப திறன், தகவல் தொழில்நுட்பம், மொழி அறிவு, ஹேக்கத்தான்ஸ், இன்டர்ன்ஷிப் இதையெல் லாம் உள்ளடக்கி பயிற்சி அளிப்பது மூலமாக உங்கள் கனவுகளுக்கு சிறகுகளைத் தந்து, நான் முதல்வன் திட்டம் உங்கள் எல்லோரையும் இன்றைக்கு உயர்த்தி இருக்கிறது.

கடந்த இரண்டு, மூன்று மாதத்தில் நிறைய தேர்வுகளின் முடிவுகள் வந்தது. நான் முதல்வன் திட்டத்தில் படித்த பலருக்கு பெரிய பெரிய வாய்ப்புகள் உருவாகியிருக்கிறது. என்னுடைய பேஸ்புக், எக்ஸ்,

இன்ஸ்டாகிராம் எல்லாம் பார்த்தீர்கள் என்றால், ஏதோ நானே வெற்றிபெற்ற மாதிரியான மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருப்பேன். மாதிரி என்ன, உண்மை யிலேயே அது என்னுடைய வெற்றிதான். தன் குடும்பத்தில் தன்னுடைய பிள்ளைகள் வெற்றி பெற்றால், ஒரு தந்தை அதை தன்னுடைய வெற்றியாகதான் கொண்டாடுவார்? அதனால்தான் உங்களை பார்க்கும்போது எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி.

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் தேதி நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவை தொடங்கினோம். அதில், 1000 பேரை தேர்வு செய்து ஒவ்வொரு மாதமும் ஏழாயிரத்து 500 ரூபாய் என்று பத்து மாதத்திற்கு ரூ.75 ஆயிரம் கொடுத்து, முதல் நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றால், ரூ.25 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கினோம். இந்த ஆண்டு பட்ஜெட்டில், முதன்மை தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு அவர்களின் டெல்லி பயணம் மற்றும் சிறப்பு பயிற்சிகளுக்கு ஊக்கத்தொகையாக ரூ.50 ஆயிரம் வழங்கப்படும் என்று அறிவித்தோம். இதன் அவுட் புட் என்ன தெரியுமா?

இந்தாண்டு யுபிஎஸ்சி கிளியர் செய்தவர்களின் எண்ணிக்கை 57. அவர்களில் 50 பேர், நான் முதல்வன் மாணவர்கள். யுபிஎஸ்சி மட்டுமல்ல, எஸ்எஸ்சி, பேங்க் தேர்வுகளுக்கும் ஆயிரம் பேரை தேர்ந் தெடுத்து, 510 பேரை டிரெயின் செய்ததில், 58 பேர் தேர்வாகியிருக்கிறார்கள். இப்படி, மாணவர்களுக்கு மட்டுமல்ல, வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ற மாதிரி பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் நான் முதல்வன் திட் டத்தில் முன்னணி தொழில் நிறுவனங்கள் மூலமாக பயிற்சி அளித்து, இதுவரைக்கும் ஒரு லட்சம் பேருக்கு திறன்பயிற்சி சான்றிதழ் வழங்கியிருக்கிறோம்.

என்னை பொறுத்தவரைக் கும், தமிழ்நாடு என்றால், சிறந்த கல்வித்தரம், சிறந்த பயிற்சி, எதிர்காலத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் உன்னதமான உயர்கல்வி என்று எல்லோரும் சொல்ல வேண்டும். அதை, இந்த நான் முதல்வன் திட்டம் சாத்தியப்படுத்தியிருக்கிறது. திறன் மேம்பாட்டை ஒரு பிரசஸ்சாக நினைத்து பயிற்சி கொடுக்கிறோம். அதனால்தான், இந்த திட்டத்தில் திறன் போட்டிகளையும் நடத்துகிறோம். கடந்த ஆண்டு டெல்லியில், நடந்த இந்தியத் திறன் போட்டியில் தமிழ்நாட்டு மாணவர்கள் 87 பேர் - 61 பிரிவுகளில் கலந்துகொண்டு, 6 தங்கம் - 8 வெள்ளி - 9 வெண்கலம் - 17 சிறப்பு பதக்கங்கள் என்று 40 பதக்கங்களை வென்று, இந்திய அளவில் மூன்றாவது இடத்தை பிடித்தார்கள்! அடுத்த ஆண்டு ஷாங்காய் நகரில் ‘உலகத் திறன் போட்டிகள்’ நடைபெறப் போகிறது.

அதில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான ‘தமிழ்நாடு திறன் போட்டிகள் - 2025’ பதிவுகள் இன்றைக்கு தொடங்குகிறது! நான் முதல் வன் தளத்தில் பதிவுசெய்து, இந்த போட்டியில் வெற்றிபெற உங்களை வாழ்த்துகிறேன். இந்த வெற்றிகளுக்கான அடித்தளத்தை பள்ளி களிலேயே நீங்கள் அமைக்க வேண்டும் என்றுதான் பள்ளி மாணவர்களின் அறிவாற்றலை கண்டறிந்து மெருகேற்றும் நான் முதல்வன் ஒலிம்பியாட் திட்டம் - பள்ளி மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டும் கல்லூரி கனவுத் திட்டம் - சமூக - பொருளாதார காரணங்களால் பள்ளிக்கல்விக்கு மேல் படிக்க முடியாத மாணவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்ய உயர்வுக்கு படி திட்டம், கிராமப்புற மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்க சிகரம் தொடு திட்டம், கல்லூரிக்கு செல்லும் அரசுப்பள்ளி மாணவ - மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் - இப்படி பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அந்த வரிசையில்தான், இன்றைக்கு, ‘வெற்றி நிச்சயம்’ திட்டத்தையும் தொடங்கி வைத்திருக்கிறேன். இந்த திட்டத்தைப்பற்றி சொல்ல வேண்டும் என்றால், உலகத்தரம் வாய்ந்த முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை நிறுவனங்களோடு இணைந்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கும் 18 முதல் 35 வயதுள்ள படித்த வேலையில்லாத இளைஞர் கள் படிப்பை பாதியிலேயே நிறுத்தியவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு குறுகிய கால திறன் பயிற்சி கள் வழங்க இருக்கிறது! இதற்கான பயிற்சித் தொகையையும் திராவிட மாடல் அரசே ஏற்க இருக்கிறது.

மாற்றுத்திறனாளிகள், பழங் குடியினர், இலங்கை தமிழர் கள், மீனவ இளைஞர்கள், சிறுபான்மையினர், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு இளைஞர்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்கள் என்று சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினர்கள் அனைவருக்கும் அரசின் நலத்திட்ட பயனாளிகளின் குடும்ப உறுப்பினர்கள் வழியாக கண்டறிந்து இந்த திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டு, ரூ.12 ஆயிரம் வரை ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

அதுமட்டுமல்ல, தொலை தூர மாவட்டங்களில் இருந்து, பயிற்சி பெற விரும்பும் மாணவர்களுக்கு, உணவுடன் கூடிய இருப்பிட வசதியும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாக வழங்கப்படும்.

இந்த திட்டத்தில் சேர - ‘ஸ்கில் வாலட்’ என்ற செயலியை உருவாக்கி யிருக்கிறோம். இந்த கிறிறில், எந்த கம்பெனியில் வேலைவாய்ப்பு இருக்கிறது? அதற்கு என்ன பயிற்சி என்று எல்லா தகவல்களும் இருக்கும். இப்படி, தமிழ்நாட்டையே உயர்த்தும் உன்னதமான திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், ‘நான் முதல்வன் திட்டம்’ என் நெஞ்சுக்கு நெருக்கமான திட்டமாக இருக்கிறது. இன்றைக்கு பணி நிய மனம் பெற்றுள்ள மாணவர் களுக்கும் - நமக்கு துணை நிற்கும் தொழில் நிறுவனங்களுக்கும், மாணவர் களான உங்களுக்கும், ஆசி ரியர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள். மாணவர்களான நீங்கள் வளர வேண்டும்; வளர்த்தெடுக்க வேண்டும் என்றுதான் ஏராளமான திட்டங்களை நாங்கள் இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக் கிறோம்.

கல்லூரி மாணவர்களுக்கு இந்தாண்டு முதல் லேப்டாப் வழங்க இருக்கிறோம். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது, கல்வியை இறுகப்பற்றிக் கொள்ளுங்கள்; உங்களுக்கு சப்போர்ட் செய்ய நான் இருக்கிறேன். திராவிட மாடல் அரசு இருக்கிறது; நாங்கள் உருவாக்கி தரக்கூடிய வாய்ப்புகள் எல்லாவற்றையும் நீங்கள் பயன்படுத்தி, நான் முதல்வன் திட்டம் மூலமாக இன்னும் பல முதல்வர்கள் உருவாக வேண்டும். உங்கள் வெற்றியை பார்த்து, உங்களை பெற்றவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியும், பெருமையும் அடைவார்களோ, அதே அளவு மகிழ்ச்சியையும், பெருமையையும் நானும் அடைகிறேன். உழைப்பு இருந்தால் வெற்றி நிச்சயம்! திறமை இருந்தால் வெற்றி நிச்சயம்! உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்! வெற்றி நிச்சயம்! இவ்வாறு அவர் பேசினார்.

# இனி நாம் எல்லாம் ஹீரோதான்.....

கதை ஆசிரியர்: ராமகிருஷ்ணன்

பக்ரி கத்து வதை காதில் கேட்ட இளைஞர்கள் எல்லாம் பக்ரியின் பக்கத்தில் ஓடிவந்து எங்கடா எங்கடா கரடி என்றார்கள் அதோ அந்த பெரிய பைப்புக்கு பக்கத்தில் முள் செடி ஓரமா பாருங்கடா என்றான் கரடி இவர்களைப் பார்த்து மீண்டும் உர் உர் என்று உரிமியது கரடி ஏய் ஆமாடா ஆமாடா கரடிடா என்றார்கள் கரடி கத்து வதையும் இளைஞர்கள் கத்துவதையும் காதில் கேட்ட கரடி வளர்ப்பவனான குருவிக்காரன் மறுபக்கமாக இருந்தவன் இவர்கள் பக்கமாக திரும்பி நீங்க எல்லாம் யாருங்க சாமி என்று இந்த பக்கமா வந்திருக்கீங்கக்க என்ன சாமி என்றார். அப்போது அவன் கையில் ஒரு கத்தி அந்த கத்தி மூணயில் ஒரு கருவாலி கழுத்தை அவன் கையில் இருந்த கத்தி பதம் பார்த்து கொண்டு இருந்தது.





அப்போது அந்த குருவிக்காரன் பக்கத்தில் இன்னொரு கருவாலி ரெண்டு கொக்கு அதன் பக்கத்திலே இன்னும் இரண்டு சின்ன பறவைகள் இதெல்லாம் அடித்து பிடித்தானா இல்லை வளவைத்து பிடித்தானா என்று தெரியவில்லை இறந்து போய் கிடந்தது இரண்டு கிளிகளை உயிரோடு கூண்டிலே அடைத்திருந்தான் அது இரண்டும் அங்கும் இங்குமாக கூண்டுக்குள்ளே கத்தி கடவுளே எங்களை யாரு இவனிடம் இருந்து காப்பாத்த போறது கடவுளே என்று கத்திக்கொண்டு கூச்சல் இட்டு கொண்டு இருந்தது.



அவன் அருகில் ஒரு மைனாவை இரண்டு இறக்கையை பின்ன போட்டிருந்தான். அது வாயை வாயை பிளந்து பிளந்து சத்தம் இட்டுக் கொண்டிருந்தது இதைப் பார்த்த இளைஞர்கள் எல்லாம் என்னடா இவன் எல்லா உயிர்களும் இப்படி கொல்றானடா என்று திகைத்து போய் நின்றார்கள் அதில் ஒரு இளஞன் சொன்னான் டேய் இவன் கூட போன வாரம் இந்த கரடி எல்லாம் கூட்டிட்டு நம்ம தெருவுக்கு வந்து கடை வீதி எல்லாம் தர்மம் எடுத்துக்கிட்டு தாண்டா இருந்தான். என்றான் அப்போது அவன் கையில் வைத்திருந்த அந்த கத்தி முனையில் சிக்கி தவித்தது சின்ன சின்ன வாயில்லா ஜீவன்கள் மாட்டிக்கொண்டு இருப்பதை பார்த்து அங்கு இருந்த இளைஞர்கள் மனதெல்லாம் பதப்பதைத்து போனது அப்போது அந்தக் குருவிக்காரன் மனைவி பசாகி கையில் சின்ன சின்ன குச்சிகளாக உடைத்து விறகுகளை சேகரித்து கொண்டு வந்தாள்.

கையில் இருந்த விறகுகளை கீழே போட்டுவிட்டு திசாகா என்றாள் குருவிக்காரன் மனைவி. என்ன பசாகி என்றான் குருவிக்காரன். சீக்கிரம் குழம்பு வைக்கணும். அதற்கு சீக்கிரமாக உன் கையில் இருக்கும் கருவாளியை முதலில் கட் பண்ணிக்கோ இந்தா மீது இத்தனையும் சீக்கிரமாக கட் பண்ணிக்கோ என்றாள்அவன் சொன்னான் ஆமாங்கோ அப்போ இந்த கொக்கு கருவாலி மைனா எல்லாத்தையும் சீக்கிரம் கட் பண்ணி கிளீன் பண்ணி தரேன் என்று சொல்லி அவனிடம் பிடித்து வந்த இருந்த கொக்கு மைனா கருவாலி எல்லாத்தையும் வெட்ட ஆரம்பித்தான் இதைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞர்கள் கண் கலங்கினார்கள்.

ஏய் வெட்டாத வெட்டாத அது பாவம் பாவம்



என்றார்கள் இளைஞர்கள் ஆமாப்பா பாவம்அப்பா அதை வெட்டாத பா குருவிகாரா பாவம் பாவம் குருவிக்காரா என்றார்கள். சாமி இதை நம்பி தான் எங்க பொழப்பே இருக்கு. வயித்து பசிக்கு வேற என்ன சாமி எங்களுக்கு இருக்கு. அதில் ஒரு இளைஞன் சொன்னான் இதெல்லாம் காட்டுல கிடைக்கிற இறைய தின்னு சுதந்திரமா அது பாட்டுக்கு பறந்து திரிந்து வாழற பறவைகளை இப்படியா அநியாயமா கொல்றியே குருவிக்காரா என்றான். சாமி இதை விட்டா எங்களுக்கு வேற வழி தெரியல சாமி எனக்கு வயித்து பசியைப் போக்குவதற்கு தான் சாமி இந்த வழி இந்த கரடிக்கும் இதுதான், எங்களுக்கும் இதுதான்.

எங்களுக்கு வீடு வாசல் எதுவுமே கிடையாது சாமி கொஞ்ச நாள் இந்த காட்டுக்குள்ள இருப்போம் அப்படி ஊர் ஊரா போய் தரும் எடுத்துக்கிட்டு அங்கங்க காட்டுக்குள்ள சின்னதா குடிசை போட்டு இது போல தான் பொழப்பு ஓடும் சாமி இப்போ இங்கேதான் இருக்க சாமி இங்கே தான் வாழ்ந்து கிட்டு இருக்கேன் சாமி என்றான் குருவிக்காரன். இதைக் கேட்டுக்கொண்டிருந்த இளைஞர்கள் ஒருவன் சொன்னான் அவனை கல்லெடுத்து அடிச்சு மண்டைய உடைச்சு கை கால் ஒடிச்சு இதெல்லாம் புடுங்கிட்டு அடிச்சு வெரைட்டிடலா மாடா டேய் செத்துப் போனது உயிரோட வடை வர போகுது அவனை அடிச்சு என்னடா ஆகப்போகுது அவனுடைய அறியாமையும் அவன் செய்வது அவனுக்கே தப்புன தெரியாது என்றார்கள் மாணவர்கள்.

அதற்கு இன்னொரு மாணவன் சொன்னான் அதெல்லாம் தப்புடா அவன் தப்பு பண்றானா நம்மளும் அந்த தப்பு பண்ண கூடாதுடா. நேர்வழியில் சொல்லி தான் சரி பண்ணனும் என்றான். சரிடா இப்போ என்னதான் பண்றது என்றார்கள். செத்துப் போன கொக்கு செத்துப் போன கருவாலி அவன் குழம்பு வச்சி சாப்பிட்டு போறேன் கருவாலி செத்துப் போச்சு, கொக்கும் செத்துப் போச்சு, மைனாவும் செத்துரா கூடாதுடா. இரண்டு கிளியையும் செத்துர போகுதுடாகுழம்பு வச்சு சாப்பிட்டு போறான் என்று ஒவ்வொரு மாணவர்களும் மன உளைச்சலோடு மன வலி தாங்காமல் மூச்சு காற்று வழியாக ஆண்டவனே நீதான் இதெல்லாம் காப்பாத்தணும் என்று புலம்பினார்கள்.

மைனாவையு இரண்டு கிளிகளையும் எப்படியாவது காப்பாற்றி ஆகணும்டா, அதுக்கு என்னடா வழி என்றான் ஒரு இளைஞன். மற்ற இளைஞர்களில் ஒருவன் சொன்னான் டேய் மைனாவை இரண்டு கிளிகளையும் காப்பாத்தணும் என்றால் ஒரே வழி தாண்டா இருக்கு. அதற்கு என்னதான் வழி என்றார்கள் அங்கு இருந்த இளைஞர்கள். டேய் நம்ம வளர்க்கலாம் என்று கேட்போம் குருவிகாரன் கிட்ட அப்போ நம்ம காப்பாத்திடலாம் என்றான். ஆமாடா ஆமாங்க ஏய் நீ சொன்னது தாண்டா சரியான ஐடியா என்று எல்லா இளைஞர்களும் குருவிக்காரன் பெயர் சொல்லி கூப்பிட்டார்கள்.

ஏய் திசாகா என்றதும் அவன் எட்டிப் பார்த்த அப்போது அவன் கையில்வை த்து இருந்த கத்தி முனையில் கருவாலியிண் இரத்தம் கொதவலையில் கத்தியை வைத்து கருவாலி நறுக்கிக் கொண்டு இருந்தான் இதை பார்க்கும் போது இளைஞர்களின் கண்ணிலிருந்து கண்ணீர் வந்தது. பாரதியார் சொன்னதும் இவருக்கு நினைவில் வரவில்லை போல் காக்கை குருவியும் எங்கள் ஜாதி என்றார் அவர் சொன்னதையும் கேட்கல வள்ளலார் யாரும் எந்த ஜீவன்களையும் துன்புறுத்த கூடாது கொள்ளவும் கூடாதுஎன்று சொன்னதும், இவருக்கு தெரியல நம்ம பள்ளிக்கூடத்துல வாத்தியார் ராமராஜன் சார் இது போல தப்புக் எல்லாம் செய்யக்கூடாது என்று சொன்னதும் இவருக்கு நினைவுக்கு வரல போல டேய்டேய் என்னடா சொல்றஅதில் ஒரு இளைஞன் ஏய், என்னடா பேசுறீங்க இவர் எப்பண்டா நம்ம பள்ளிக்கூடத்துக்கு வந்தாரு ராமராஜன் சார் சொன்னது அவருக்கு எப்படிடா தெரியும் அவர்தான் பள்ளிக்கூடத்துக்கே வரலையாடா சார் நமக்கு தாண்டா சொன்னது இவருக்கு சொல்லல எப்படிடா இவருக்கு



தெரியும்னு நீ சொன்ன என்னடா நீஇதெல்லாம் சொல்ற டேய் ஏதோ ஒரு கவனத்தில் மறந்து சொல்லிட்டேன்டா என்றான் இன்னொரு இளைஞன் சொன்னான் ஒன்னு ஓங்கி மண்டையிலேபோட்டா வரும்டா கவனத்துல அப்பம்தெரியும்டா உனக்கு மறந்து போச்சாஇல்ல மறந்தேபோச்சா என்றான்.



இன்னொரு இளைஞன் சொன்னான் பெருந்தலைவர் காமராஜர் ஐயா இலவசமா கொடுத்த கல்வியும் உணவும் கொடுத்தது இவன் தெரிஞ்சு கீழ போல இருக்கு, பசியோடு பள்ளிக்கூடத்துக்கு வந்தாள் கல்வி கற்றுக்கு ஏலாது என்பதை உணர்ந்து மதிய உணவு என்னும் திட்டத்தை கொண்டு வந்தார் மாணவர்கள் ஊக்கமாக கல்வி கற்கவும் உற்சாகமாக பள்ளிக்கு வருவார்கள் மற்ற நல்ல விஷயங்களையும் கல்வியின் மூலமாக அவர்கள் கற்றுக்குவார் என்பதற்காகவே கல்வியும் கற்றுக்குவார்கள் அதன் வாயிலாக நல்ல செயல்களையும் செய்வார்கள் மாணவர்கள் என்பதற்காகவே இந்தத் திட்டத்தை கொண்டு வந்தார் மாணவர்கள் நல்ல நோக்கத்திலே முன்னேறுவார்கள் என்பதற்காக காமராஜர் ஐயா அவர்கல் நமக்கு கல்வி உணவு இதெல்லாம் தந்தார்.

இந்தக் குருவிக்காரருக்கு இதெல்லாம் இவர் நம்ம பக்கம் வந்தால் தானே தெரியும் இவர் காட்டுக்குள்ளே இருந்ததுனால அவருக்கு ஊர்ல என்ன நடக்குது உலகத்தில் என்ன நடக்கு என்று தெரியாம போச்சு. வாயில்லா ஜீவன்களை துன்புறுத்தக் கூடாது என்பதும் இவருக்கு தெரியாது. காக்கை குருவிகள் வாயில்லா ஜீவன்கள் எல்லாம் நம்ம ஜாதி என்று இவனுக்குத் தெரியாது. அதுக்கு பேசும் மொழி இருந்தால் அது பேசி இருக்கும் அதற்கு பேசும் மொழி இல்லையே அதனால் அவருக்கு தெரியல நமக்கு தெரியல அது நமக்கு தெரிஞ்சிருந்தா அதன் மூலமாக நமக்கு பல புதிய புதிய விஷயங்கள் தெரிந்திருக்கும். அதுக்கு நாம் தீங்கு செய்யாமல் இருந்திருப்போம் இதெல்லாம் இந்தக் குருவிக்காரருக்கு தெரியாது அதனால் தான் இந்த மாதிரி தப்புகல அவன் செய்கிறான். அதை நம்ம புரிகிற மாதிரி சொல்லி இந்த மாதிரியான தப்புகளை செய்யாத என்போம். சரிடா மைனாவை நாம் வளர்ப்போம் கிளியேயும் நாம் வளர்ப்போம் என்று கேட்போம் என்றான்.

(தொடரும்)

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 8681876155

# பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளை பெருமையாக கொண்டாடி மகிழ்வோம்



தாம் படிக்க விட்டாலும் மக்கள் படித்து முன்னேற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் நாட்டின் வளர்ச்சிக்காகவும் மக்கள் முன்னேற்றத்திற்காகவும் தன் வாழ்வை தியாகம் செய்தவர் தான் பெரும் தலைவர் காமராஜர் ஐயா அவர்கள் அவர் நாட்டுக்கு ஆற்றிய பங்களிப்பு மிகப்பெரிய பங்களிப்பானது பொறுமை என்றால் காமராஜர் பெருமை என்றால் காமராஜர் கல்விக்கண் தந்து மகிழ்ந்தவர் காமராஜர்.

தமிழகத்தில் வறுமையை போக்கியவர் காமராஜர் தன் பெருமைக்காக வாழ்ந்தவர் அல்ல பிறரை பெருமைப்படுத்தி பார்த்தவர் தான் காமராஜர் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியும் பொதுப்பணி துறைகளையும் சிறந்து செயல்பட செய்தவர்தான் காமராஜர் அவர்கள் தனக்கென்று எதையும் சேர்த்து வைக்காமலும் மக்களுக்காக வாழ்ந்தவர் தான் காமராஜர் அரசியலில் உண்மைத் தன்மையை உயர்வாக மதித்தவர்தான் காமராஜர் பணிவும் பறிவும் உடையவர்தான் காமராஜர் ஐயா வாழ்ந்த வாழ்க்கை எல்லாம் மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் தான் இதை இன்னும் சரித்திரம் சொல்லிக்கொண்டே இருக்கும்.



நம் நாட்டில் வெளிநாட்டிலும் அதுபோல் நம் நாட்டில் உள்ள பெரிய பெரிய மேதைகளும் அறிஞர்களும் பெரிய பெரிய மனிதர்களும் பாமரர்கள் புகழ்ந்து பேசி இருக்கிறார்கள் காமராஜர் ஐயா நாட்டுக்காக ஆற்றிய பணிகள் எத்தனை எத்தனையோ மக்களுக்காக செய்த நல்ல நல்ல விஷயங்கள் எண்ணில் அடங்காதவை என்னி சொல்ல முடியாதவை மக்கள் மனதில் நிறைந்து இருப்பவரும் மக்கள் மனதில் பதிந்தவர் தான் காமராஜர் ஐயா அவர்கள் அவர்தான் என்று சொல்லிய பெரிய மனிதர்களும் மான தந்தை பெரியார் அவர்கள் காமராஜரை பார்த்து பச்ச தமிழன் என்று சொல்லி மகிழ்ந்தார்.

அதுபோல் வெளிநாட்டில் உள்ளவர்களும் பெருந்தலைவர் நாட்டுக்காக செய்த பணிகளையும் மக்களுக்காக செய்த தியாகங்களையும் அவர் செய்த நல்ல செயல்களையும் கலிஃபோர்னியாவில் உயர்ந்த மலை சிகரத்தில் உன்னைப் போல் தலைவர்கள் பிறக்கட்டும் என்று எழுதப்பட்டுள்ளது உலகில் பெரிய மலை நம் நாட்டிலும் இருக்கிறது அதுபோன்று உயர்ந்த மனிதர்களும் இருக்கிறார்கள் அவர்களில் ஒருவர் திரு காமராஜ் என்று சொன்னவர் திரு ஒய் பி சவான் அவர்கள் நம் நாட்டு தலைவர்களின் ஒருவரான சொல்லி மகிழ்ந்தது செய்தி பெருந்தலைவர் மிகுந்த அறிவும் ஆற்றலும் பெற்றவர் பாட்டாளி மக்களைப் பற்றியும் பாமர மக்களைப் பற்றியும் எல்லோரையும் விட நன்கு தெரிந்து வைத்திருக்கிறார் நேருவுக்கு பிறகு காமராஜர் தான் நேருவின் பாதையில் நாட்டை நடத்தி செல்கிறார்.

இந்திய தேசத்திற்கு மாபெரும் தலைவரை தமிழ்நாடு தந்துள்ளது என்று கூறி மகிழுந்தவர் தான் திரு அதுல்யா கோஸ் அவர்கள் இதெல்லாம் பெருந்தலைவருக்கு கிடைத்த பாராட்டுகளும் பெருமைகளும் அவர் மக்களுக்காக செய்த செயல்களும் நாட்டுக்காக உழைத்து நாட்டுக்கே தியாகம் செய்தவர் தானே காமராஜர் பெருந்தலைவர் காமராஜரின் பெயர் சரித்திரத்தில் பொறிக்கப்பட்டுள்ளது அவர்கள் சரித்திரத்தில் அவர் புகழ் என்றும் நிறைந்திருக்கும் நாடும் நாட்டு மக்களும் நாமும் அவர்புகழை புகழ்ந்து பேசிக்கொண்டே இருப்போம் வாழ்க காமராஜர் அவர் பிறந்த நாளை போற்றி கொண்டாடி நாமும் வாழ்வோம் வாழ்க காமராஜர் புகழ் என்று மகிழ்வோம் வாழ்க பாரதம் வளர்க தமிழகம் வாழ்க வாழ்க என்றும் வாழ்க காமராஜர் புகழோடு வாழ்க வாழ்க என்று வணங்குவோம் வாழ்க காமராஜர் புகழ்

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: 8681876155

# சான்றோர் குரல்

**சந்தா விபரம்:**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ.300 |
| 5 ஆண்டு சந்தா | ரூ.1,500 |
| ஆயுள் சந்தா | ரூ.5,000 |

**வங்கி விபரம்:**

A/C HOLDER:
G.B.PACHAIYAPPAN
BANK: ICICI BANK
A/C NO: 021201596561
BRANCH: CHENNAI, SANTHOM
IFSC CODE: ICIC0000212

**விளம்பர கட்டணம்**

| | |
|---|---|
| கலர் முழு பக்கம் | ரூ. 7,000.00 |
| 2-ம் பக்கம் (கலர்) | ரூ. 7,500.00 |
| பின்பக்க அட்டை (கலர்) | ரூ. 10,000.00 |
| பின்பக்க முன் அட்டை (கலர்) | ரூ. 7,500.00 |
| முழு பக்கம் (B/W) | ரூ. 3,000.00 |
| 1/2 பக்கம் (B/W) | ரூ. 1,500.00 |

**Contact No: 99622 35002**

Saandrorkural / சான்றோர் குரல்
Subscribe செய்யுங்கள்...

Saandrorkural saandrorkural@gmail.com Saandrorkural

*தினசரி செய்திகள்... உடனடி செய்திகளுக்கு...*

## சான்றோர் குரல் மல்டி மீடியா-வின் சான்றோர் குரல் நியூஸ் யூடியூப் சேனல்

SAANDROR KURAL NEWS

SUBSCRIBE LIKE COMMENT SHARE






திருச்சியில் ஜூன் 14 மதசார்பின்மை காப்போம் மாபெரும் மக்கள் எழுச்சி பேரணி திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் சார்பில் மாவட்ட செயலாளர் பழ.சண்முகம் அவர்கள் தலைமையில் பேரணிக்கு பழங்கரை பிரிவிலிருந்து அன்னூர் மற்றும் அவினாசி பகுதியில் இருந்து மகளிர் விடுதலை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் கவுசல்யா அவர்கள் முன்னிலை வகித்தார் அன்னூர் திருமா கோபால். வணிகர் அணி மாநில துணை செயலாளர் பா.ராசவளவன் அவர்கள் பங்கேற்று அனைவரும் மதசார்பினை காண்போம்!!

மதம்

மக்களுக்கானது அரசுக்கான தல்ல என முழக்கங்கள் எழுப்பி திருச்சி நோக்கி பயணித்தபோது.



# சாலையில் கவனம் இருந்தால் வாழ்க்கையும் சோலையாகும்





மெதுவாக செல்லுங்கள் உங்கள் பயணம் இனிமையாக அமையும் உங்கள் பயணங்களின் போது பொது இடங்களில் செல்போனில் பொறுமையாக கேளுங்கள் இனிமையாக பேசுங்கள் எல்லோரும் ரசிக்கும் வண்ணமாக இருக்கும் நடப்பதற்கே நடைபாதை என்பார்கள் நடப்பவருக்கு வழிவிட்டு வாகனத்தில் செல்லலாமே பொது இடங்களில் நடப்பவர்களுக்கு வழிவிட்டு உங்கள் சாலை ஓரம் உள்ள கடைகளை உங்கள் பக்கமாக உள் பக்கமாக கடைகளை வைக்கலாமே சாலைக்குள் வேண்டாமே.

இதனால் சாலையும் சோலையாகுமே உங்கள்சாலை ஓரம் கடை வையுங்கள் சாலைக்குள் இல்லாமல் வாகனம் செல்லும் வழியில் இல்லாமல் பாதசாரிகள் நடக்கும் இடத்திலும் இல்லாமல் வாகனத்துக்கும் வழி விட்டு நடந்து செல்வர்களுக்கும் புது வழி கொடுத்து பெரிய ஒளி வரலாமே பூக்கடைக்கு விளம்பரம் எதற்கு அதன் வாசனையை நமக்கு விளம்பரம் தானே வாங்குவதற்கு சாலையில் நீ போகும் போது உனக்கு முன்னாள் பள்ளம் மேடு இருப்பதை பார்த்து போவது போல் உனக்கு பின்னால் இருந்து வரும் வண்டியையும் பார்த்து முன்னால் இருக்கும் சிகினலையும் பார்த்து போனால் உன் குடும்பத்தையும் உன்னையும் அழகாய் பார்த்துக்கலாம்.

உனக்கு உயிர் அவசியம் அதனால் தலைக்கு தலைக்கவசம் அணிவது அவசியம் அதை அணியாமல் நீ போய் மாட்டுவது சிலரிடம் அதில் முக்கியமானது இரண்டு பேர் இடம் ஒன்னு சாலை விபத்து இன்னொன்னு போக்குவரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ஹெல்மெட் நீ அணியாமல் போனால் சாலை விதி மீறல் என்று போலீஸ் சார் உனக்கு போடுவார் ஃபைன் நீ ஹெல்மெட் அணிந்தும் சாலை விதிகளை மதித்தும் சாலையில் சென்றால் போலீஸ் சார் உனக்கு சொல்வார் நீதான் இஸ் ஃபைன் என்று போலீஸ் சார் அவருக்கு சாலையில் பாதுகாப்பின் கடமை முக்கியம்.



சாலையில் நீ போகும் போது சாலையின் பாதுகாப்பு முக்கியம் உங்கள் குடும்பத்துக்கு நீங்கள் முக்கியம் தானே அதுபோல் சாலையில் பாதுகாப்பான பயணத்தில் நீங்கள் செயல்பட்டீங்க ஆனால் நீங்களும் பாதுகாப்பான ஹீரோ தான் என்று உங்கள் குடும்பத்தாரும் உங்களுக்கு போலீஸ் சார் உங்களுக்கு ஒரு சல்யூட் என்பார்கள் சுற்றி உள்ளோரும் நம் உறவினரும் உங்களை பாராட்டினால் அப்போது நீங்கள் தானே சாலையில் நீங்கள் தான் உண்மையான ஹீரோ வாழ்விலும் உண்மையான ஹீரோ நீங்கள் தான் ●

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: 9444842105

# இலவச நீரிழிவு மருத்துவ விழிப்புணர்வு முகாம்

*11 வது சர்வதேச யோகா* தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் ஜி.டி.என். இயற்கை மற்றும் யோகா ஆராய்ச்சி மருத்துவக்கல்வி ஒருநாள் இலவச நீரிழிவு மருத்துவ விழிப்புணர்வு முகாம்.



*11 வது சர்வதேச யோகா* தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் ஜி.டி.என். இயற்கை மற்றும் யோகா ஆராய்ச்சி மருத்துவக்கல்வி மற்றும் மத்திய யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆராய்ச்சி கவுன்சில் [CCRYN], புது டெல்லி [Ministry of AYUSH] இணைந்து நடத்திய யோகா சம்வேஸ் நிகழ்வில் ஒருநாள் இலவச நீரிழிவு மருத்துவ விழிப்புணர்வு முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவை ஜி.டி.என். கல்வி குழுமம் தலைவர் Ln.Dr. K.ரெத்தினம், இயக்குநர் Dr.துரை ரெத்தினம் மற்றும் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் Dr.P.சிவக்குமார் ஆகியோர் தலைமை வகித்து சிறப்பித்தனர். இவ்விழாவில் நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அறிவுரை நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது. இத்துடன் நோயாளிகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனைகளும், யோகா பயிற்சிகள் அளிக்கப் பட்டது.

இம்முகாமில் நீரிழிவு நோய் குறித்து விவரங்கள் உணவு பழக்க வழக்கங்கள், பயிற்சிகள் மற்றும் தடுப்பு முறைகளை குறித்து Dr. தீபா, Dr.கீர்த்தனா, Dr.வேதஹர்சினி, Dr. ரென்ஜீஸ், Dr.சௌந்தரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கம் அளித்தனர். இம்முகாமில் சுமார் 300 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

---

**கவிதை**



# மகிழ்வேன்

**அழகு என்றால் பூவை ரசிப்பேன்**

**அமுது என்றால் தமிழை நினைப்பேன்**

**கவிதை என்றால் தேனாய் ருசிப்பேன்**

**பெண் என்றால் தாய்யாய் நினைப்பேன்**

**மழலை என்றால் கொஞ்சி மகிழ்வேன்**

**பெரியோர் என்றால் மதித்து நடப்பேன்.**

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: 8681876155



## எத்தனை கி.மீ.க்கு எவ்வளவு அதிகரிப்பு?

# பயணிகள் ரயில் கட்டணம் உயர்வு

நாடு முழுவதும் செவ்வாய்க்கிழமை (ஜூலை 1) முதல் பயணிகள் ரயில் சேவை அடிப்படை கட்டணம் உயர்த்தப்படுகிறது.

இது குறித்து மத்திய அரசு வெளியிட்ட தகவல்: ரயில் கட்டணங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பயணிகளின் சேவைகளுக்கான நிதியை அதிகரிக்கும் வகையில், ரயில்வே அமைச்சகம் பயணிகள் ரயில் சேவைகளின் அடிப்படை கட்டணத்தை சீராய்வு செய்து திருத்தியுள்ளது. இது 2025 ஜூலை 1 முதல் அமலுக்கு வருகிறது. கட்டண சீரமைப்பின் முக்கிய அம்சங்கள்:

◆ புறநகர் ரயில் பயணக் கட்டணங்கள் மற்றும் சீசன் டிக்கெட் கட்டணத்தில் (புறநகர் மற்றும் புறநகர் அல்லாத வழித்தடங்களுக்கு) எந்த மாற்றமும் இல்லை.

◆ சாதாரண ஏசி அல்லாத வகுப்புகளுக்கு (புறநகர் அல்லாத பிற ரயில்கள்): இரண்டாம் வகுப்பு ஒரு கிலோமீட்டருக்கு அரை பைசா அதிகரிப்பு. (நிபந்தனைக்கு உட்பட்டது)

500 கி.மீ வரை கட்டண அதிகரிப்பு இல்லை.

501 முதல் 1500 கி.மீ தூரத்துக்கு ரூ.5 அதிகரிப்பு

1501 முதல் 2500 கி.மீ தூரத்துக்கு ரூ.10 அதிகரிப்பு

2501 முதல் 3000 கி.மீ தூரத்துக்கு ரூ.15 அதிகரிப்பு

**படுக்கை வசதி வகுப்பு:** ஒரு கிலோமீட்டருக்கு 0.5 பைசா அதிகரிப்பு

**முதல் வகுப்பு:** ஒரு கிலோமீட்டருக்கு 0.5 பைசா அதிகரிப்பு

**மெயில் / எக்ஸ்பிரஸ் ரயில்களுக்கு (ஏசி அல்லாதவை):**

**இரண்டாம் வகுப்பு:** ஒரு கிலோமீட்டருக்கு 01 பைசா அதிகரிப்பு

**படுக்கை வசதி வகுப்பு:** ஒரு கிலோமீட்டருக்கு 01 பைசா அதிகரிப்பு

**முதல் வகுப்பு:** ஒரு கிலோமீட்டருக்கு 01 பைசா அதிகரிப்பு

**ஏசி வகுப்புகளுக்கு (மெயில் / எக்ஸ்பிரஸ் ரயில்கள்):**

◆ அனைத்து ஏசி வகுப்புகளுக்கும் ஒரு கிலோ மீட்டருக்கு 02 பைசா அதிகரிக்கப்பட்டுள்ளது.

◆ ராஜ்தானி, சதாப்தி, துரந்தோ, வந்தே பாரத், தேஜஸ், ஹம்சஃபர், அமிர்த பாரத், மகாமனா, கதிமான், அந்தியோதயா, ஜன் சதாப்தி, யுவா எக்ஸ்பிரஸ் உட்பட முதன்மை மற்றும் சிறப்பு ரயில் சேவைகளுக்கான கட்டணம், திருத்தப்பட்ட வகுப்பு வாரியான கட்டண கட்டமைப்பின்படி பொருந்தும். துணை கட்டணங்களில் எந்த மாற்றமும் இல்லை.

◆ முன்பதிவு கட்டணம், அதிவிரைவு ரயில் கூடுதல் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களில் எந்த மாற்றம் இல்லை. விதிகளின்படி ஜிஎஸ்டி தொடர்ந்து வசூலிக்கப்படும்.

◆ 01.07.2025 அன்று அல்லது அதற்குப் பிறகு முன்பதிவு செய்யப்படும் டிக்கெட்டுகளுக்கு திருத்தப்பட்ட கட்டணங்கள் பொருந்தும். இந்த தேதிக்கு முன் வழங்கப்பட்ட டிக்கெட்டுகளுக்கு எந்த மாற்றமும் இன்றி தற்போதைய கட்டணமே பொருந்தும்.

திருத்தப்பட்ட கட்டணக் கட்டமைப்பு சீராக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக அனைத்து மண்டல ரயில்வேக்களுக்கும் ரயில்வே அமைச்சகம் தேவையான வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. அனைத்து ரயில் நிலையங்களிலும் கட்டண அட்டவணையை புதுப்பிக்க ரயில்வே மண்டல அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறு வணிகர்களுக்கான மின் கட்டண சலுகைகள் என்னென்ன?

தமிழகத்தில் அனைத்து வீட்டு மின் இணைப்புகள், குடிசை மற்றும் குறுந்தொழில் நுகர்வோர்கள், விசைத்தறி நுகர்வோர்கள், 50 கிலோ வாட் வரை உள்ள தாழ்வழுத்த தொழிற்சாலைகள் மற்றும் 500 யூனிட் வரை பயன்படுத்தும் சிறு வணிகர்களுக்கு எவ்வித மின்கட்டண உயர்வும் இல்லை. இதன்மூலம் 2.83 கோடி மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள். மேலும், தற்போது உள்ள அனைத்து இலவச மின்சார சலுகைகளும் தொடரும் என மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.




இது குறித்த அரசின் செய்திக் குறிப்பு: மின்சார வாரியங்களின் நிதி நிலைமை சீராக இருப்பதற்காக அந்தந்த மாநிலங்களின் ஒழுங்குமுறை ஆணையம் அவ்வப்பொழுது மின் கட்டணத்தில் மாற்றம் செய்து வருகிறது. தமிழகத்தை பொறுத்தவரையில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பல்லாண்டு மின் கட்டண உயர்வை அறிவித்து ஆண்டுதோறும் நுகர்வோர் விலைக்குறியீட்டு அடிப்படையில் மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணத்தை மாற்றி அமைத்து ஆணை வெளியிடுகிறது.

அதன்படி ஆண்டிற்கு ஜூலை 1ம் தேதி முதல் வரக்கூடிய மின் கட்டண மாற்றங்களில் பொதுமக்கள் மற்றும் நுகர்வோர் நலன் கருதி தமிழக முதல்வர் ஸ்டாலினின் அறிவுறுத்தலின்படி அனைத்து, 2.42 கோடி வீட்டு நுகர்வோர்களுக்கு ஏற்படக்கூடிய மின் கட்டண மாற்றங்களை அரசே ஏற்று அதற்கான மானியத்தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும் என்று உத்தரவிட்டதை ஏற்கனவே மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் சார்பில் அறிக்கையாக வெளியிடப்பட்டது.

மேலும், அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் 100 யூனிட் வரை விலையில்லா மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும் மற்றும் குடிசை இணைப்புகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படும். 100 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை. தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.374.89 கோடி அரசுக்கு கூடுதல் செலவாகிறது.

வீட்டு மின் நுகர்வோர்களுக்கு, நிலைக்கட்டணம் இரு மாதங்களுக்கு ரூ.20 முதல் ரூ.50 வரை செலுத்துவதில் இருந்த முழுவிலக்கு தொடர்ந்து அளிக்கப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களும் பயனடைவார்கள். தற்பொழுது விவசாயம், கைத்தறி, விசைத்தறி , வழிப்பாட்டுதலங்கள் மற்றும் தாழ்வழுத்த தொழிற்சாலை ஆகிய மின் கட்டண பிரிவிற்கு வழங்கப்பட்டு வரும் மின்சார மானியம் தொடர்ந்து வழங்கப்படும். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின்கட்டண சலுகைகள்:

› இரு மாதங்களுக்கு 500 யூனிட் வரை பயன்படுத்தும் சிறு வணிக மின் நுகர்வோர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டணத்தை (Energy charges) தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.51.40 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள சுமார் 34 இலட்சம் சிறு வணிக மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள்

› 50 கிலோவாட் வரை ஒப்பந்த பளு (sanctioned load) கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு (LT (III) B Industries) உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.76.35 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 2.81 லட்சம் தாழ்வழுத்த தொழிற்சாலை மின்நுகர்வோர்கள் பயனடைவார்கள்.

› குடிசை மற்றும் குறு தொழில்களுக்கு (LT (III) A(1) – Cottage and Micro Industries) உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.9.56 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 2.70 லட்சம் குடிசை மற்றும் குறு தொழில் மின்நுகர்வோர்கள் பயனடைவார்கள்.

› விசைத்தறி நுகர்வோர்களுக்கு 1000 யூனிட் வரை இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். மேலும் 1001 யூனிட்டுகளுக்கு மேல் உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.7.64 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 1.65 லட்சம் விசைத்தறி நுகர்வோர்களும் பயனடைவார்கள்.

எனவே 2025-26 ஆம் ஆண்டின் மின் கட்டண உயர்வின் படி தமிழ்நாட்டில் சுமார் 2.83 கோடி மின் நுகர்வோர்களுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லாமல் பயனடைவார்கள். இதனால் தமிழக அரசிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.519.84 கோடி கூடுதல் செலவாகும். இந்த மானியத் தொகையினை தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும். இது தவிர பெரிய தொழில், பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் பிற வகை கட்டண பிரிவுகளுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ளவாறு 3.16%க்கு மிகாமல் மின் கட்டணம் உயர்த்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அருள்மிகு ஸ்ரீ முத்து மாலை அம்மனுக்கு ஆனி பெறும் திருவிழா கோடை விழா



மங்கல இசை அன்னை ஸ்ரீ முத்துமாலை அம்மன் ஆலயம் முழுவதும் இசைக்க நாதஸ்வரம் மேல தாளங்களும் முழங்க நாளும் நாளும் எந்நாளும் மேல தாளங்கள் நாதஸ்வரம் இசை முழங்கம குயில் இனங்கள் ஸ்ரீ முத்துமாலை அம்மனின் புகழை பாடி பாடி குயிலின் குரல் ஓசையால் அன்னை ஸ்ரீ முத்துமாலை அம்மான் மகிழ மயில் இனங்கள் எல்லாம் அன்னையின் ஆலயம் எங்கும் நடனம் ஆடி ஆடி ஆனந்த மழையில் அது நனைந்தூ மகிழ ஆண்டோர்களும் சான்றோர்களும் பக்தர்கள் ஸ்ரீ முத்துமாலை அம்மனின் பாடலை பாடிஆடி பாடி பாடி சந்தோசத்தில் திகழ தாய்க்கு ஆரிரோ ஆராரிரோ தாயே ஆரிரோஆராரிரோ தாயே ஸ்ரீ முத்துமாலை அம்மா என்று தாயே ஊஞ்சலாட்டி உள்ளூர் பக்தர்களும் வெளி ஊர் பக்தர்களும் ஸ்ரீ முத்துமாலை அம்மனை ஊஞ்சலாட்டி அன்னையின் ஆனந்த அருளை அனைவரும் பக்தர்களும் பக்திகளும் பெறுக

தாமிரபரணி ஆற்றின் கரையோரம் குரங்கனி ஊரில் அன்னை ஸ்ரீ முத்துமாலையம்மா ஆலயம் ஆன்றோர்களும் சான்றோர்களும் பக்தர்களும் பக்திமான்களும் தாயே உன் அருளால் உன்னை வணங்கி ஆயிரம் ஆயிரம் மாக பல ஆயிரமாக பக்தர்கள் பக்திகளும் பக்திமான்களும் உன்னை வழிபட்டு வாழ்வது தானம்மா எங்களுக்கு நல் வாழ்வே அமையும் தாயேஸ்ரீ முத்துமாலை அம்மனின் ஆணிப்பெரும் திரு விழாவுக்கு வந்து அம்மனை வணங்கி அம்மனுக்கு விரதம் இருந்து அம்மனின் அருளால் பக்தர்கள் அனைவரும் காப்பு கட்டி அம்மனின் கோடை விழாவில் ஆடி பாடி சந்தோசமாக கயிறு சுத்தி ஆடி வந்தோம் உன் கருணையால் எங்கள் கஷ்டமெல்லாம் காணாமபோனதம்மா ஆயிரம் கண் பானை எடுத்து ஆயிரம் ஆயிரம் ஆக நல்ல நன்மைகள் எல்லாம் வந்து சேர்ந்ததம்மா ஆடி உன் ஆலயம் வளம் வந்தோம் அண்ணை உன்னை வணங்கிமுடி காணிக்கையும் கொடுப்போம் குழந்தைகளுக்கு காது குத்தி ஆலயம் வளம் வருவோம்வளம் பெறவும் நலம்ளம் பெறவும் வலம் பெற வால்வோவணங்குவோம் தாயே ஸ்ரீ முத்துமாலை அம்மா உனக்கு பட்டெடுத்து கட்டுவோம் திருமண வையோகம் நடத்தி வைப்பாள் மிக விரைவிலே தாயே உன்னை நம்பி கை கூப்பி வணங்கும் பிள்ளைகளுக்கு திருமண வைவோகம் செய்து வைப்பவழும் நீதானே தாயே உன் அருளாலே தொட்டில் மழலை செல்வம் சிரித்து கொஞ்சி மகிழு செய்வாய் தாயே உன்னை நம்பி வாழும் மக்களுக்குஸ்ரீ முத்துமாளையம்மா உன்ன அருளே அருள் தானம்மா எந்நாளும் எங்களுக்கு எங்கள் இல்லமும் உள்ளமும் செழித்து செழிக்க அருள் புரிவாயம்மா ஸ்ரீ முத்துமாலையம்மா எங்களுக்கு கல்வி செல்வம் செழிக்கவும் செய்யும் தொழிலும் செழிக்கவும் செய்த விவசாயமும் செழித்து வளமாகணும் தாயே குரங்கனி ஸ்ரீ முத்துமாலையம்மா தாயே போற்றி போற்றி போற்றி உழைக்கும்மக்கள் நாங்கள் தானமா எல்லாம் கஷ்டமும் விலகி செய்யும் தொழில் எல்லாம்நல்ல லாபமாக இஷ்டமாக அதிர்ஷ்டமாக காத்து அருள்வாய் அன்னை குரங்கனி ஸ்ரீ முத்து மாலையம் தாயே போற்றி போற்றி போற்றிஆயிரம் கண்ணுடைய தாயை உனக்கு அர்ச்சனையும் செய்வோம்.



ஆலயத்தில் விளக்கேத்தியும் வழிபடுவோம் ஆயிரம் கண் உடையவளே எங்கள் முத்துமாலை அம்மா தாயே எங்கள் வாழ்வு ஆனந்தமாகனும் தாயே குரங்கனி ஸ்ரீ முத்துமாலையம்மா தாயே உன்னால் இந்த பூலோகம் புண்ணியமானது மக்கள் வாழ்வும் புதிய புற்று உணர்வு பெற்று புது வாழ்வு பெறணும் தாயே மாவுல விளக்கேற்றி மாவிளக்கு போட்டு வணங்குகிறோம் தாயே எங்களுக்கு மழலைச்செல்வம் பிறக்க அருளும் தாயே பூஞ்சரம் தாய்க்கு மாலை வாங்கிபோட்டு மணவாழ்வு யோகமும் மகிமையா ஆகலும் தாயே பூவும் பொட்டுமாக மங்கையர் எல்லாம் வாழனும் தாயே கண் மலர் வெளியில் வாங்கிப் போட்டு கண் பார்வை பெருகி நல்ல ஒலியா தெரியணும் தாயே எங்களுக்குகை கால் வலி நீங்க அம்மனை வணங்கி வேண்டி மரத்தில் செய்த கை கால்காலை வாங்கி போட்டு ஜனங்கள் எல்லாம் வாழுது தாயே கை கால் வலி நீங்கி எங்கள் மணக்குறையை கொஞ்சம் கொஞ்சமாககுறைப்பாய் தாயே அல்லும் பகலும் எங்களை காத்து அருளும் தாயே ஸ்ரீ முத்துமாலை அம்மனைபோற்றி போற்றி போற்றி தொழில் வளம் பெருகி உடல் நலம் காத்து எல்லா ஜீவன்களையும் காத்து அருள் புரிந்து வாழ வைக்கணும்.

தாயே குரங்கனி ஸ்ரீ முத்துமாலையம்மா தாயே வருமானமும் பெருக்கித் தருணும் தாயே தென்றலாய் வருவாய் அம்மா சின்ன சின்ன நல்ல செய்தி சொல்லி மனசுக்கு ஆறுதல் தருவாயம்மா நல்லதாய் நடக்க செய்வாய் தாயே குரங்கனி ஸ்ரீ முத்துமாலையம்மா தாயேசெவ்வாய்க்கிழமை செவ்வரளி மாலை உனக்கு சூடி உன்னை வணங்குவோம் தாயே வெள்ளிக்கிழமை வேளைக்கு ஏத்தி மல்லிகை பூ மாலை சூடி உன்னை வணங்குவோம் தாயே எங்களுக்கு வேண்டிய வரங்களை தந்து அருள்வாய் தாயே அன்று இருந்த ராஜா ஒரு நாள் உன் ஆலயம் வந்து ஆலயத்தை அகற்ற சொல்லி ஆணையிட்

இட்டு ஆலயத்தை அகற்ற முயன்றான்.

அம்மனின் ஆலயத்தை இடிக்கக்கூடாது என்று மக்கள் எல்லாம் தடுத்திருந்தார் வந்த ராஜா கேட்காமல் இடிப்பேன் என்று அடம் பிடித்தான் மக்களும் பக்தர்களும் ராஜாவை பார்த்து நீ ஆலயத்தை இடிக்க முயன்றால் உனக்கு ஆபத்துத்தான் என்றார்கள் அப்படியா என்றான் வந்த ராஜா ஆமா அப்படித்தான் என்றார்கள் அங்கு இருந்த ஊர் மக்களும் பக்தர்களும் ராஜா சொன்னான் அப்படி ஆனால் நான் உங்கள் அன்னை முத்துமாலை அம்மனை அழைக்கிறேன் அவங்கள் எனக்கு ஒரு குரல் கொடுத்தால் நான் விட்டு விடுகிறேன். ஆலயத்தை இடிக்க மாட்டேன்என்றான் ஊர் மக்களும் பக்தர்களும் அன்னையிடம் வேண்டினார்கள் அன்னையே தாயே முத்துமாலை அம்மா எங்களை காப்பாத்தமா என்றார்கள் அந்த ராஜா சொன்னான் நான் கூப்பிடுகிறேன் என்றான்.

அன்னை உனக்கு என்ன சொல்கிறாள் என்று கேள் என்றார்கள் ஊர் மக்களும் பக்தர்களும் கோயிலை இடிக்க வந்த ராஜா தாமிரபரணி ஆற்றங்கரையில் வெள்ளை குதிரை மேல் அமர்ந்து முத்துமாலை என்று குரல் கொடுத்தார் அப்போது தாமிரபரணி ஆற்றில் கரையிலிருந்து ஒரு அதிசய காத்து வீசி அப்போதுஎதிர் இருந்து குரல் ஓம் என்று ஒரு குரல் வந்தது அது ஆலயத்திலிருந்து வந்ததா அது ஆகாயத்தில் இருந்து ஓம் என்று வந்ததா ஆனால் ஓம் என்று குரல் வந்து ராஜா காதில் விழுந்ததுதான் தெரியும் அவன் இருந்த வெள்ளை குதிரை கீழே சாய அதன் மேலே இருந்த ராஜா ஓம் என்ற குரல் கேட்டு ஆற்றின் கரையில் குதிரையோடு உருண்டு உருண்டு கீழேவிழுந்தான் வாய் கொலறியது வாய் பேச வரவில்லை.

ராஜாவின் நாக்கு வெளியே தள்ளியது கை சாடையாக தண்ணி தண்ணி என்று கைய அசைவால் சொன்னான் கூட வந்த காவலாளிகளும் ராஜாவை தூக்கி தாமிரபரணி ஆற்றில் ஓடிக்கொண்டிருக்கும் நதியின் நீரை எடுத்து வந்து ராஜாவின் தாகத்துக்கு கொடுத்தார்கள் கொஞ்சம் நீரை எடுத்து முகத்தில் தெளித்து துடைத்தார்கள்து சிறிது நேரத்தில் ராஜாவுக்கு சிறிது தெளிவு வந்தது அவன் வந்த குதிரையும் தெளிவு பெற்றது தெளிவடைந்த ராஜா எழுந்து நின்று தாயே என்னை மன்னித்திடுங்கள் நான் சிறுதவறு செய்து விட்டேன் உங்கள் சக்தி என்ன என்று தெரியாமல் இந்த தவறை செய்துவிட்டேன் என்று மன்னிப்பு கேட்டான்.

பின்பு அவன் சொன்னான் முத்துமாலை அம்மன் ஆலயத்திற்கு விளக்கு ஏற்றுவதற்காக கொஞ்சம் பணம் நான் மாதம் மாதம் அனுப்புகிறேன் என்று உறுதி அளித்தான் மக்களும் பக்தர்களும் ராஜாவே வணங்கி வழியனுப்பி வைத்தார்கள் சாத்திருந்த ஆலயத்தில் சன்னதியின் கதவுகள் திறந்து ஸ்ரீ முத்துமலை அம்மனுக்கு அபிஷேகம் ஆராதனைகள் செய்து தாயே ஸ்ரீ முத்துமாலயம்மா முத்து மாலையம்மா முத்து மாலையம்மா என்று அனைவரும் குரல் எழுப்பி தாயை வணங்கி வழிபட்டு சந்தோஷம் அடைந்தார்கள். அம்மனை வணங்கி மகிழ்ந்தார்கள் அதட்டிப் பார்த்தவனும் மிரண்டு போனான் தாயே உன் சக்தி என்ன என்று எல்லோருக்கும் புரிந்திருக்கும் என்று நம்புகிறோம் தாயே காட்டு வெள்ளம் தாமிரபரணி ஆற்றில் கரைபுரண்டு வந்தாலும் ஆற்றின் கரையிலிருந்து தாயேஉன் கண் அசைவில் ஒரு அசம்பாதவும் நடக்காமல் காப்பாற்றும் தாயே நீதானம்மா இந்த ஊர் மக்களை காத்து அருள்வது போல் எல்லா ஊர் மக்களையும் காத்து அருள்வாய் தாயே ஸ்ரீ முத்துமாலை அம்மா தாயே அதிகாலையில் உன் ஆலயம் வளம் வந்து உன்னை தரிசனம் செய்தோம்.



அம்மா வான் மழையாய் உன் அன்பு மழையை பொழிந்து பூமி செழித்து நாங்கள் மகிழ்ந்து நெல் விளைந்து புல் பொசிந்து



ஜீவன்கள் உன்று மகிழ்ந்து வாழ்வதுதெல்லாம் உன் செயல்தானம்மா உன் அதிசயமே அதிசயம் தானம்மா எங்களுக்கு சீதா தேவியு நீதான் அம்மா ஸ்ரீ முத்துமாலை அம்மனும் நீதானமா தாயே எங்களை காத்து அருள்வாய் தாயே ஸ்ரீ முத்துமாலை அம்மா தாயே ஊரெல்லாம் உன் பெயர்தானம்மா எங்களுக்கு முத்துமாலை என்பார்கள் முத்து ராஜ் என்பார்கள் முத்துக்குமார் என்பார்கள்முத்தம்மா என்பார்கள் முத்து என்பார்கள் முத்து ரமேஷ் என்பார்கள் முத்துக்கனி என்பார்கள் முத்துமணி முத்துராசு என்பார்கள்.

இன்னும் எத்தனையோ எத்தனையோபெயர்கள் முத்துக்களால் உள்ள பெயர் விலங்குதம்மா விடிவெள்ளியாய் வானிலிருந்து பாமர மக்களுக்கு மணி சொல்லி உழைக்க வழிகாட்டிய தாயே அடை மழைக்காலத்திலும் குடையாய் அருள் புரிவாய் தாயை வேப்பலையில் இருப்பவளே வேண்டியதை தருபவளே நோய் நொடி இல்லாமல் காப்பாத்து அருள் தந்து அருள் புரிவழும் நீதானே தாயே விரும்பியதை விருப்பமாய் விரும்பிய பொழுதில் அருள் புரிபவளே நல்ல வேதங்களை விளக்கி சொல்லி பாமரனையும் படிக்க வைத்தவளும் நீதானே தாய் பலர் பாராட்டு வண்ணமாக அருள் தந்த அன்பு தந்து அரவணைத்த தாயே எந்நாளும் உழைக்க சொல்லி ஊக்கம் தருவளே எங்கள் முத்துமாலை அம்மா தாயேநாங்கள் ஆக்கி வைத்த சக்கரை பொங்கலை அல்லி அல்லி பருகி ஆனந்தமாக ஊஞ்சலிலே ஆடி மகிழ்வளே மக்களையும் பக்தர்களையும்மகிழ வைப்பவளே எங்களுக்கு ஆனந்தமான வாழ்வை அள்ளி தருவளே ஸ்ரீ முத்துமாலையம்மா தாயே உனக்குத்தானம்மா அபிஷேகம் அலங்காரம் தாயே ஸ்ரீ முத்துமாலை அம்மனுக்கு அபிஷேகம் தாமிரபரணி ஆற்றின் நீராலே அபிஷேகம் பாலாலே அபிஷேகம் பன்னீராலே அபிஷேகம் மஞ்சளாலே அபிஷேகம் பஞ்சாமிர்த தாலே அபிஷேகம் விபூதி அபிஷேகம் முக்கடலில் தீர்த்த நீரால் அபிஷேகம் இளநீர்அபிஷேகம் இசை முழங்க வேதங்கள் பாடி பூக்களாலும் குங்குமத்தாலும் தமிழில் அன்னை ஸ்ரீ முத்துமாலை அம்மனுக்கு அர்ச்சனை அருள்மிகு ஸ்ரீ முத்துமாலை அம்மனை போற்றி போற்றி போற்றி நாங்கள் எல்லாம் தெரிந்தோ தெரியாமலோ ஏதேனும் சிறிய தவறு எது செய்திருந்தாலும் எங்களை மன்னித்து காத்து அருள்வாய் தாயேகுரங்கனி ஸ்ரீ முத்து மாலை அம்மா தாயே

எல்லா நலமும் வளமும் தந்து எங்களை வாழ வைக்கணும் தாயே நாங்கள் எல்லாம் உங்களை வணங்கி வாழ்கிறோம் தாயே எங்களையும் எல்லோரையும் காத்து அருளும் தாயே அருள்மிகும் ஸ்ரீ முத்துமாலை அம்மா தாயே போற்றி போற்றி போற்றி நம்மை எல்லாம் காவல் காத்து அருள்புரியும் காவல் தெய்வமாக காத்து அருள் புரிந்து கொண்டிருக்கும் அருள்மிகு பெரியசாமி வணங்கி அருள் பெற்று வாழ்வோம் பெரியசாமியே போற்றி போற்றி போற்றி.

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 9444842105

### 41 ஆண்டுகளுக்கு பிறகு

# விண்வெளி செல்லும் இந்திய வீரர் ஷுபன்ஷு சுக்லா

## பால்கன்9 ராக்கெட் மூலம் 4 பேர் குழு பயணம்



இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா (39) உள்ளிட்ட 4 வீரர்கள் அடங்கிய குழுவினர் ஆய்வுப் பணிக்காக டிராகன் விண்கலத்தில், ஃபல்கான் 9 ராக்கெட் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு (ஐஎஸ்எஸ்) நேற்று புறப்பட்டு சென்றனர்.

அமெரிக்காவில் உள்ள ஆக்ஸியாம் ஸ்பேஸ் என்ற தனியார் நிறுவனம், நாசா, இஸ்ரோ மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை ஆகியவை இணைந்து, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் மற்றும் ஃபல்கான் 9 ராக்கெட் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு 4 விண்வெளி வீர்களை அனுப்பி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளும் திட்டத்தை தயாரித்தது.

இதற்கு இஸ்ரோ சார்பில் செல்ல ககன்யான் திட்டத்துக்கு ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டிருந்த விமானப்படை பைலட்களில் குரூப் கேப்டன் சுபான்ஷூ சுக்லா என்பவர் தேர்வு செய்யப்பட்டார். இவர் உத்தர பிரதேசம் லக்னோவைச் சேர்ந்தவர். கடந்த 1985ம் ஆண்டு பிறந்த இவர், 2006ல் இந்திய விமானப்படையில் பைலட்டாக சேர்ந்தார். 2019ம் ஆண்டு விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் இஸ்ரோவின் ககன்யான் திட்டத்துக்கு தேர்வு செய்யப்பட்டார். அதன்பின் ரஷ்யாவின் யூரி காகரின் விண்வெளி மையத்துக்கு இவர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்.

சுபான்ஷு சுக்லாவுடன் சேர்ந்து, அமெரிக்காவின் பெக்கி விட்சன் (கமாண்டர்), போலந்தின் ஸ்லாவோசி உஸ்னான்ஸ்கி, ஹங்கேரியின் திபோர் கபு ஆகியோரும் விண்வெளி மையம் புறப்பட்டனர். இவர்கள் சென்ற 'கிரேஸ்' என பெயரிடப்பட்ட டிராகன் விண்கலம், ஃபல்கான் 9 ராக்கெட் மூலம் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து நேற்று மதியம் 12.01 மணிக்கு அனுப்பப்பட்டது. இந்த விண்கலம் 28 மணி நேர பயணத்துக்குப்பின் சர்வதேச விண்வெளி மையத்தை இன்று மாலை 4.30 மணிக்கு சென்றடையும். இவர்களது பயணம்

# “அற்புதம்...”

## விண்வெளி வீரர் ஷுபன்ஷு சுக்லாவுடன் கலந்துரையாடிய பிரதமர் மோடி சிலாகிப்பு

சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள இந்தியாவின் குரூப் கேப்டன் ஷுபன்ஷு சுக்லாவுடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடினார். அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த வீடியோவில், “குரூப் கேப்டன் ஷுபன்ஷு சுக்லா உடனான உரையாடல் அற்புதமாக இருந்தது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து அவர் தனது அனுபவங்களை என்னோடு பகிர்ந்துகொண்டார். அந்தச் சிறப்புக் கலந்துரையாடலை நீங்களும் பாருங்கள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த உரையாடலின்போது, “நீங்கள் இந்தியாவில் இருந்து வெகு தொலைவில் இருக்கிறீர்கள்... ஆனால், இந்தியர்களின் மனதில் மிக நெருக்கம் கொண்டுள்ளீர்கள். உங்களின் இந்த வரலாற்றுப் பயணம், விண்வெளி ஆய்வு மாணவர்களின் உத்வேகத்தைக் கூட்டும்” என்று ஷுபன்ஷு சுக்லாவிடம் பிரதமர் மோடி கூறினார்.

அப்போது, சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து பூமியை பார்க்கும்போது உணர்ந்த தருணத்தை பிரதமர் மோடியிடம் விவரித்த ஷுபன்ஷு சுக்லா, “பூமி முழுவதும் எல்லைகள் ஏதுமின்றி ஒன்றாகத் தெரிகிறது. நாம் வரைபடத்தில் பார்ப்பதைக் காட்டிலும் இந்தியா மிகவும் பெரிதாகத் தெரிகிறது” என்று வியப்பு மேலிட பகிர்ந்தார்.

முன்னதாக, நாசா, இஸ்ரோ மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை ஆகியவற்றுடன் இணைந்து வர்த்தக ரீதியான விண்வெளி திட்டத்தை அமெரிக்காவின் அக்சியம் ஸ்பேஸ் என்ற நிறுவனம் தயாரித்தது. ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மூலம் 4 வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்துக்கு (ஐஎஸ்எஸ்) அனுப்பி, 2 வார காலம் ஆய்வு பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. இந்த திட்டத்தில் இஸ்ரோ சார்பில் பயணிப்பதற்கு, ககன்யான் திட்டத்துக்காக ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டிருந்த விமானப்படை விமானியான ஷுபன்ஷு சுக்லா தேர்வு செய்யப்பட்டார். அவருடன் அமெரிக்காவின் பெக்கி விட்சன் (கமாண்டர்), ஹங்கேரியின் திபோர் கபு, போலந்தின் ஸ்லாவோசி உஸ்னான்ஸ்கி ஆகிய வீரர்களும் இத்திட்டத்தில் இணைந்தனர்.



அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் ராக்கெட்டுடன் இணைந்த டிராகன் விண்கலம் மூலம் இந்த குழுவினர் கடந்த 25ம் தேதி விண்வெளிக்கு புறப்பட்டனர். டிராகன் விண்கலம் 28 மணி நேர பயணத்துக்கு பிறகு, சர்வதேச விண்வெளி மையத்தில் இணைந்தது. டிராகன் விண்கலத்தில் வந்த ஷுபன்ஷு சுக்லா உள்ளிட்ட 4 வீரர்களையும், சர்வதேச விண்வெளி மையத்தில் ஏற்கெனவே தங்கி ஆய்வு பணி மேற்கொண்டு வரும் குழுவினர் கட்டியணைத்து வரவேற்றனர்.

டிராகன் குழுவினர் 2 வார காலத்துக்கு அங்கு தங்கியிருந்து, பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். உணவு தானியங்கள், பாசிகளை வளர்த்தல், நுண்ணிய நீர்வாழ் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியங்கள், புவிஈர்ப்பு விசை இல்லாத சூழலில் மின்னணு கருவிகள் மூலம் மனிதர்கள் உரையாடுவது, விண்வெளி சூழலில் ஊட்டச்சத்து, தாவரங்களின் பாரம்பரிய பண்புகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது உட்பட மொத்தம் 60 ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். அதன்பிறகு, டிராகன் விண்கலத்தில் பூமிக்கு திரும்ப உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாதத்தில் மோசமான வானிலை மற்றும் திரவ ஆக்ஸிஜன் கசிவு போன்ற காரணங்களால் 3 முறை ஒத்திபோடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

விண்வெளி பயணத்துக்குமுன் சுபான்ஷு சுக்லா அளித்த பேட்டியில், “நான் விண்வெளிக்கு ஆய்வு உபகரணங்களை மட்டும் எடுத்துச் செல்லவில்லை. கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் மற்றும் கனவுகளை கொண்டு செல்கிறேன்” என்றார்.

**60 ஆய்வுகள்:** சர்வதேச விண்வெளி மையம் செல்லும் இந்தக் குழுவினர், இஸ்ரோவின் 7 அறிவியல் சோதனைகளுடன் சுமார் 60 பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர். சர்வதேச விண்வெளி மையத்தில் 2 வாரம் காலம் தங்கியிருக்கும் இந்தக் குழுவினர் ஆய்வுகளை முடித்துவிட்டு டிராகன் விண்கலத்தில் பூமி திரும்புவர்.

**41 ஆண்டுகளுக்குப்பின்:** விண்வெளி பயணம் மேற்காண்ட முதல் இந்தியர் ராகேஷ் சர்மா. இவர் கடந்த 1984 ம் ஆண்டு ரஷ்யாவின் சோயுஸ் விண்கலத்தில் விண்வெளிப் பயணம் மேற்கொண்டார். அதன்பின் 41 ஆண்டுகளுக்குப்பின் விண்வெளி பயணம் மேற்கொள்ளும் இந்தியர் சுபான்ஷு சுக்லா என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ராகேஷ் சர்மாவின் நினைவாக ஒரு பொருளையும் சர்வதேச விண்வெளி





மையத்துக்கு கொண்டு செல்கிறார். அதை விண்வெளி பயணத்தை முடித்து பூமி திரும்பியபின் தெரிவிப்பதாக சுபான்ஷு சுக்லா தெரிவித்தார்.

**அல்வா, மாம்பழ ஜூஸ்:** சர்வதேச விண்வெளி மையம் செல்லும் வீரர்கள் தங்களுக்கு பிடித்தமான உணவு வகைகளை, விண்வெளிச் சூழலுக்கேற்ப சிறப்பாக தயாரித்து எடுத்துச் செல்வது வழக்கம். அதன்படி இந்திய வீரர் சுபான்ஷு சுக்லா, சர்வதேச விண்வெளி மையத்தில் இருக்கும் சக வீரர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக இந்திய இனிப்பு வகைகளை எடுத்துச் செல்கிறார். கேரட் அல்வா, பாசி பருப்பு அல்வா, மாம்பழச் சாறு ஆகியவற்றை எடுத்துச் சென்றுள்ளார்.

**லக்னோவில் கொண்டாட்டம்:** சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றுள்ள சுபான்ஷூ சுக்லாவின் சொந்த ஊர் உ.பி. லக்னோ. இதனால் அங்கு அவருக்கு போஸ்டர்கள் ஒட்டி லக்னோ மக்கள் கொண்டாடினர்.

**பிரதமர் மோடி வாழ்த்து:** எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

இந்தியா, ஹங்கேரி, போலந்து மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி வீரர்களை சுமந்து செல்லும் வெற்றிகரமான விண்வெளி பயணத்தை நாங்கள் வரவேற்கிறோம். சர்வதேச விண்வெளி மையத்துக்கு செல்லும் முதல் இந்தியர் குரூப் கேப்டன் சுக்லா. அவர் தன்னுடன் 140 கோடி இந்தியர்களின் வாழ்த்துகள், நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்களையும் கொண்டு செல்கிறார். அவருக்கும், மற்ற விண்வெளி வீரர்களுக்கும் அனைத்து வெற்றிகளும் கிடைக்க வாழ்த்துகள்! இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

**அருமையான பயணம்:** ஃபல்கான் 9 ராக்கெட்டை விட்டு கிரேஸ் விண்கலம் பிரிந்து விண்வெளியில் பயணத்தை தொடங்கியவுடன், இந்திய வீரர் சுபான்ஷு சுக்லா வெளியிட்ட செய்தியில் கூறியிருப்பதாவது: என்ன அருமையான பயணம்! வணக்கம் என் அன்பான நாட்டு மக்களே. விண்கல பயணம் எவ்வளவு அருமையாக இருக்கிறது. 40 ஆண்டு கழித்து நாம் விண்வெளிக்கு திரும்பியுள்ளோம். இது மிகவும் அருமையான பயணம். தற்போது வினாடிக்கு 7.5 கி.மீ வேகத்தில் நாங்கள் புவி வட்டபாதையை சுற்றிக் கொண்டிருக்கிறோம்.

எனது தோளில் தேசியக் கொடி உள்ளது. இது நான் தனிநபர் அல்ல, நான் இந்திய மக்களுடன் இருக்கிறேன் என்பதை கூறுகிறது. இது சர்வதேச விண்வெளிமையத்துக்கு எனது பயணத்தின் தொடக்கம் அல்ல. இந்தியாவின் விண்வெளி பயணதிட்டத்துக்கான தொடக்கம். இந்த பயணத்தில் இந்தியர்கள் அனைவரும் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். இதை நாம் பெருமையாக கருதி, இந்தியா விண்ணுக்கு வீரர்களை அனுப்பும் பயணத்தை நாம் தொடங்குவோம். ஜெய்ஹிந்த், ஜெய் பாரத். இவ்வாறு அவர் கூறினார்.

**கண் கலங்கினார் சுபான்ஷு சுக்லாவின் தாய்:** சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட 4 வீரர்களுடன் டிராகன் விண்கலத்தை சுமந்து கொண்டு ஃபல்கான் 9 ராக்கெட் நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தின் ஏவுதளத்திலிருந்து நேற்று மாலை தீப்பிளம்புடன் புறப்பட்டு விண்ணில் சீறிப் பாய்ந்தது. இதை நாசாவின் தரைகட்டுப்பாட்டு மையத்தின் பிரம்மாண்ட திரையில் சுபான்ஷு சுக்லாவின் குடும்பத்தினர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ராக்கெட் விண்ணில் சீறிப் பாயந்ததும், சுபான்ஷு சுக்லாவின் தாயார் ஆஷா சுக்லா கைகூப்பியபடி பிரார்த்தனை செய்தார். அவர் கண்களில் ததும்பிய கண்ணீரை அவர் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார். சுபான்ஷு சுக்லாவின் தந்தை சாம்பு தயாள் சுக்லாவும் இந்திய விமானப்படையின் முன்னாள் பைலட். மகனின் விண்வெளிப் பயணத்தை அவர் ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்தார்.

## அமித் ஷா கருத்தால் அதிமுக – பாஜகவில் சலசலப்பு:

# கூட்டணியில் பங்கா, ஆட்சியில் பங்கா என தொடரும் குழப்பம்

தமிழகத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்றும் அதில் பாஜகவின் பங்கு இருக்கும் என அமித் ஷா தெரிவித்திருந்தார். ஆனால், அதிமுகவினர் கூட்டணி மட்டும்தான், கூட்டணி ஆட்சியெல்லாம் இல்லை என கூறி வருகின்றனர். எனவே, கூட்டணியில் பங்கா, ஆட்சியில் பங்கா என்ற தெளிவு இல்லாமல் அதிமுக பாஜகவினரிடையே தொடர்ந்து குழப்பம் நீடிக்கிறது.

சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக பாஜக கூட்டணியும் உறுதியாகிவிட்டது. இதற்கிடையில் அதிமுக தலைமையின்கீழ் கூட்டணி ஆட்சி என பாஜகவினர் கூறி வருகிறார்கள். ஆனால், அதிமுகவினரோ தேர்தல் கூட்டணி மட்டும் தான். கூட்டணி ஆட்சியெல்லாம் கிடையாது என கூறுகின்றனர்.

இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தமிழ் நாளிதழ்களுக்கு அளித்த நேர்காணலில், '2026 சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். அதில் பாஜகவின் பங்கு நிச்சயம் இருக்கும்,' என கூறியிருந்தார். மேலும், கூட்டணியின் முதல்வர் குறித்த கேள்விக்கு, அதிமுகவில் இருந்தே ஒருவர் முதல்வர் என குறிப்பிட்டிருந்தார். பழனிசாமி பெயரை அமித் ஷா தவிர்த்துவிட்டார்.

அமித் ஷாவின் இந்த கருத்துக்கள் கூட்டணியில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தவகையில், அதிமுக பாஜகவை சேர்ந்த தலைவர்கள், கூட்டணி குறித்து முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்து வருவது, தொண்டர்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

அதாவது, தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியை வெற்றி பெற வைப்பதிலும், தமிழகத்தில் ஆட்சியை பிடிப்பதிலும் பாஜகவின் பங்கு இருக்க போகிறதா அல்லது தேர்தலில் வெற்றி பெற்று, தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அமைக்கப்படும் ஆட்சியில் பங்கு இருக்க போகிறதா என்பதே அந்த குழப்பம்.




இந்நிலையில், அமித் ஷா தெரிவித்த கருத்து தொடர்பாக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கூறும்போது, 'இதுகுறித்து அமித் ஷாவும், பழனிசாமியும் பேசிக்கொள்வார்கள். அமித் ஷா கூட்டணி அறிவித்த போதே, பழனிசாமி தலைமையில்தான் ஆட்சி அமையும் என தெளிவாக கூறிவிட்டார்' என்றார்.

முன்னாள் மாநில தலைவர் தமிழிசை கூறும்போது, 'தேசிய ஜனநாயக கூட்டணியில், ஆட்சி அமைப்பது யார், முதல்வராக வேட்பாளர் யார் என்பதை ஏற்கெனவே பழனிசாமியை அருகில் வைத்தே அமித் ஷா தெளிவுப்படுத்தியிருக்கிறார். எனவே, பழனிசாமிதான் முதல்வர் வேட்பாளர்.

தற்போது அமித் ஷா கூறிய வார்த்தைகளை வைத்து கூட்டணியில் குழப்பம் ஏற்படுத்த நினைக்கிறார்கள். சட்டப்பேரவை தேர்தலுக்கு பின், தமிழகத்தில் நிச்சயமாக தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமையும். அதில் பாஜகவும் அங்கமாக இருக்கும் என்பதை மிகத் தெளிவாக அமித் ஷா கூறியுள்ளார்' என்றார்.

இந்நிலையில், அதிமுக முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் கூறுகையில், 'இதற்கான விளக்கத்தை பொதுச்செயலாளர் தான் சொல்ல வேண்டும். பொது எதிரியான திமுகவை ஆட்சி அதிகாரத்தில் இருந்து இறக்க வேண்டும். இந்த கருத்தை ஒருமித்த கருத்தாக ஏற்படுத்தி, இந்த கருத்துக்கு யாரெல்லாம் இசைவு தெரிவிக்கிறார்களோ, அவர்களை அழைத்து கூட்டணி அமைக்கப்படும்.

அவர்களோடு கூட்டணி அமைப்பதோடு சரி. கூட்டணி அரசு என்பது இதுவரை தமிழகத்தில் அமைந்ததாக சரித்திரம் இல்லை. பழனிசாமி தலைமையில் இந்த கூட்டணி அமைகிறது என அமித் ஷா தெரிவித்துள்ளார். அப்படியெனில் முதல்வர் வேட்பாளர் பழனிசாமிதானே' என்றார். இவ்வாறு, அடுத்தகட்ட நிர்வாகிகள் பல்வேறு வகையான விளக்கங்களை அளித்தாலும், அதிமுக, பாஜகவின் கீழ் நிலை நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் இந்த விளக்கங்கள் சார்ந்த குழப்ப நிலை நீடிக்கிறது. ●

# ஜி.டி.என்.கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான புதிய சூழலுக்கான அறிமுகப் பயிற்சியின் தொடக்க விழா

திண்டுக்கல் ஜி.டி.என். கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான புதிய சூழலுக்கான அறிமுகப் பயிற்சி நிகழ்ச்சியின் தொடக்க விழா நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் எம்.இன்பலெட்சுமி வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.சரவணன் தலைமை உரையில் மாணவர்களின் மேம்பாட்டிற்கான பெற்றோர்களின் பங்கு குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

டீன் நிர்வாகம், முனைவர் எம்.பொன்னையா பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் எ.பரமேஸ்வரன், சுயஉதவிப்பிரிவின் துணைமுதல்வர் முனைவர் யு.நடராஜன், ஆலோசகர் முனைவர் எஸ்.ராமசாமி, கல்வி இயக்குநர் முனைவர் என்.மார்க்கண்டேயன் ஆகியோர் வாழ்த்துரையில் கல்லூரியின் சிறப்பம்சங்கள் மாணவர்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள், மாணவர்களுடைய செயல்பாடுகள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தனர்.

ஜி.டி.என்.கல்லூரியின் தாளாளர் அரிமா டாக்டர் கே.ரெத்தினம் தனது சிறப்புரையில் இந்த நிகழ்வின் முக்கியத்துவம், மாணவர்களின் திறன்மேம்பாட்டிற்கான ஏற்பாடுகள், கல்லூரியின் நோக்கம், மாணவர்களின் ஒழுக்கம், புதிய பாடப்பிரிவுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக சர்வதேச தலைமைப் பண்புகள் பயிற்றுநர், தன்னம்பிக்கைப் பேச்சாளர் முனைவர் பால்சுசில் மாணவர்தம் வளர்ச்சியில் பெற்றறோர்களின் பங்கு, கல்வியின் முக்கியத்துவம், கல்லூரியின் சிறப்புகள், சிறந்த பெற்றோராய் திகழ்வது பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெற்றோர்கள் சிலர் தங்கள் எதிர்பார்ப்புகள் மற்றும் இக்கல்லூரியை தேர்ந்தெடுத்ததற்கான காரணங்கள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

மதிய நிகழ்வாக முனைவர் பால்சுசில் முதலாமாண்டு மாணவர்களுக்கான சிறப்புரையில், மாணவர்கள் கல்லூரியின் சிறப்புகள், திறன்மேம்பாட்டிற்கான வழிமுறைகள் பற்றி சிறப்பாக எடுத்துரைத்தார்.

இவ்விழாவில் 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியின் முடிவில் கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பி.பாண்டியம்மாள் நன்றியுரையாற்றினார்.

# ஆண்கள் ஐவர் ஒருநாள் ஹாக்கி போட்டியில் பாண்டியாஸ் பி அணியினர் வெற்றி

*திண்டுக்கல் ஜி.டி. என். கல்லூரியில் பாண்டியாஸ் ஹாக்கி கிளப் சார்பாக இரண்டாம் ஆண்டு ஆண்கள் ஐவர் ஒருநாள் ஹாக்கி போட்டியில் பாண்டியாஸ் பி அணியினர் வெற்றி பெற்றனர்.*




*திண்டுக்கல் ஜி.டி. என். கல்லூரியில் பாண்டியாஸ் ஹாக்கி கிளப் சார்பாக இரண்டாம் ஆண்டு ஆண்கள் ஐவர் ஒருநாள் ஹாக்கி போட்டி நடைபெற்றது. இதில் திண்டுக்கல் மாவட்டத்தில் 13 அணிகள் பங்கேற்றனர். இதில் இறுதி போட்டியில் பாண்டியாஸ் பி அணியினர் 4 2 என்ற கோல் கணக்கில் ராக்போர்ட் அணியினரை வென்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஹாக்கி திண்டுக்கல் மாவட்ட தலைவர் நாட்டாண்மை* Dr.Ln.N.M.B. *காஜாமைதீன் கலந்து கொண்டு முதல் பரிசை வென்ற பாண்டியாஸ் பி அணிக்கு சுழற்கோப்பை மற்றும் பரிசுத்தொகையை வழங்கினார். இந்நிகழ்வில் ஹாக்கி திண்டுக்கல் மாவட்ட செயலாளர் ராமானுஜம், பொருளாளர் விக்டர்ராஜ், ஜி.டி.என். கல்லூரி பேராசிரியர் அருண், குணா மற்றும் பாண்டியாஸ் கிளப் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

ஆரோக்கியம்



# வயிற்றுப்புண்ணை குணமாக்கும் திராட்சை

காலையில், திராட்சை சாறு குடித்து வந்தால், வேறெந்த மருத்துவ சிகிச்சைக்கும் கட்டுப்படாத வயிற்றுப்புண் முழுமையாக குணமாகும். (அழகும் ஆரோக்கியமும்) இது குறித்து விரிவாக தெரிந்து கொள்ளலாம்.

திராட்சையை, கொடிமுந்திரி என்றும் அழைப்பார்கள். திராட்சை ரசத்தில் இருந்து பல வகையான மருந்துகளும், டானிக்குகளும் தயாரிக்கப்படுகின்றன. இதனால், இதற்கு டானிக் புரூட் என்ற பெயரும் உண்டு. (அழகும் ஆரோக்கியமும்) குடல் புண், கல்லீரல், மண்ணீரல் கோளாறு உள்ளவர்கள், இதன் பழச் சாறை, மூன்று வேளையும், அரை அவுன்ஸ் வீதம் பருகினால், குணம் பெறலாம். அன்றாட வாழ்வில் திராட்சையை சேர்த்துக் கொண்டால், உடலுக்கு ஏராளமான நன்மைகள் கிடைக்கும்.

திராட்சையில், கருப்பு திராட்சை, பச்சை திராட்சை, பன்னீர் திராட்சை, காஷ்மீர் திராட்சை, ஆங்கூர் திராட்சை, காபூல் திராட்சை, விதையில்லா திராட்சை என பல வகைகள் உண்டு. (அழகும் ஆரோக்கியமும்) இவை அனைத்திற்கும் நோய்களை குணப்படுத்தும் சக்தி உண்டு. குறிப்பாக, அல்சருக்கு திராட்சை அருமருந்தாகும்.

காலையில், திராட்சை சாறு குடித்து வந்தால், வேறெந்த மருத்துவ சிகிச்சைக்கும் கட்டுப்படாத வயிற்றுப்புண் முழுமையாக குணமாகும். (அழகும் ஆரோக்கியமும்) அதேபோல், தலைச்சுற்றல், மலச்சிக்கல், கை கால் எரிச்சல் உள்ளவர்களும், திராட்சையை பழமாகவோ, சாறாகவோ உட்கொண்டு பயனடையலாம். மலச்சிக்கலை சரி செய்ய, திராட்சை நல்ல மருந்து.

மலச்சிக்கல் உள்ளவர்கள் உலர் திராட்சையை இரவு உறங்கும் முன் ஒரு கைப்பிடி அளவு சாப்பிட்டால், மறுநாள் காலை பலன் தெரியும். (அழகும் ஆரோக்கியமும்) இதே பிரச்சினை குழந்தைகளுக்கு இருந்தால், சிறிதளவு தண்ணீரில், உலர் திராட்சையை இரவில் ஊறப்போட்டு, காலையில் பிசைந்து, அதன் சாறு மட்டும் குடிக்க கொடுத்தால் சரியாகி விடும்.

கர்ப்பிணி பெண்களுக்கு, குமட்டல், வாய்க்கசப்பு இருக்கும் நேரங்களில், திராட்சையை சாப்பிட்டால் பலன் கிடைக்கும். (அழகும் ஆரோக்கியமும்) எடை குறைவாக இருப்பவர்களும், உடம்பில் சூடு அதிகம் உள்ளவர்களும், திராட்சையை சாப்பிடலாம். ரத்த சுத்திகரிப்பில் திராட்சை முக்கிய பங்கு வகிக்கிறது.

திராட்சை பழச்சாறு, சூரிய வெப்பத்திலிருந்து தாக்கக் கூடிய சரும பாதிப்புக்கள் மற்றும் கதிர்களிடமிருந்தும், வெப்பத்தால் வரும் கட்டிகளிலிருந்தும் பாதுகாக்கும் தன்மை கொண்டது. (அழகும் ஆரோக்கியமும்) இது இயற்கையாகவே சருமப் பிரச்சினைகளை வர விடாமல் தடுக்கும் சக்தி கொண்டது. பொதுவாக, வெயில் காலத்தில் தினமும் ஒரு குவளை திராட்சை சாறு அருந்துவது சிறந்தது.

திராட்சை சாற்றை சருமத்தில் தேய்த்து வந்தால், அதில் உள்ள இறந்த திசுக்கள் நீங்கி, சுருக்கங்கள் அற்று இயற்கையாக காணப்படும். (அழகும் ஆரோக்கியமும்) நல்ல ரத்த ஓட்டத்தால், சருமத்தின் பளபளப்பு தன்மையும் அதிகரிக்கிறது. திராட்சை சாறு, சருமத்துக்கான ஈரப்பதத்தை இயற்கையாகவே கொடுக்கிறது.





## சன் குடும்ப மோதல்...



### கலாநிதி - தயாநிதி விவகாரம்:

# கலைஞர் இல்லாத குறையை தீர்ப்பாரா ஸ்டாலின்?

சன் நெட்வொர்க் நிறுவனத்தின் பங்குகளை சட்டவிரோதமாக தனது பெயருக்கு மாற்றிக் கொண்டதாக கலாநிதி மாறனுக்கு தயாநிதி மாறன் நோட்டீஸ் அனுப்பியது குறித்து திமுக தரப்பில் விவரம் தெரிந்தவர்கள் கவலையுடன் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சன் நெட்வொர்க் நிறுவனம், விமான சேவை, சினிமா, விளையாட்டு, பத்திரிகை உள்ளிட்ட பல துறைகளிலும் கால்பதித்து கோலோச்சி வருகிறது. இத்தனைக்குமான ஆதாரப் புள்ளி கருணாநிதியின் மனைவி தயாளு அமமாள், முரசொலி மாறனின் மனைவி மல்லிகா மாறன் ஆகியோரால் 1985 டிசம்பர் 12ல் தொடங்கப்பட்ட சுமங்கலி கேபிள் நிறுவனம் தான். இதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக தான் 1993 ஏப்ரல் 14ல் சன் டிவி தொடங்கப்பட்டது.

முரசொலி மாறன் இருந்தவரை எல்லாம் சரியாகப் போய்க் கொண்டிருந்த நிலையில், அவரது மறைவுக்குப் பிறகுதான் கலாநிதி மாறன் சட்டவிரோதமாக சன் நெட்வொர்க்கின் பங்குகளை தனது பெயருக்கு மாற்றிக் கொண்டதாக இப்போது தெரிவித்துள்ள தயாநிதி மாறன், “அப்பா இறந்த போதே, ‘சொத்துப் பரிவர்த்தனைகள் தொடர்பாக ஏதும் செய்துவைத் திருக்கிறீர்களா?’ என தாத்தா (கருணாநிதி) கேட்டார். அதற்கு, ‘அப்பா இருந்தால் என்ன செய்வாரோ அதை கலாநிதி முறையாகச் செய்வார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது’ என்று சொன்னேன்” என்று கூறி இருக்கிறார்.

இந்த நிலையில் அண்ணன் தம்பிக்கு இடையில் இப்போது வெடித்திருக்கும் இந்த பிரச்சினையின் அண்மை நிலவரத்தை அறிந்த திமுகவினர், “கலாநிதி தான் சன் நெட்வொர்க் நிறுவனத்தை இந்தளவுக்கு வளர்த்திருக்கிறார் என்றாலும் அதில் தயாநிதியின் பங்கும் இருக்கிறது. அவரது சப்போர்ட் இருந்ததால் தான் பிற மாநிலங்களிலும் சேனல்களை தொடங்க முடிந்தது. அதற்காக அவர் பாதிக்குப் பாதி கேட்க வில்லை. மொத்த சொத்து மதிப்பில் மூன்றில் ஒரு பங்கை தந்தால் போதும் என்றுதான் கேட்கிறார். ஆனால் கலாநிதி தரப்பில், அதற்கு உடன்படவில்லை எனச் சொல்கிறார்கள்.

கலைஞர் இருந்த போது குடும்பத்துக்குள் என்ன

பிரச்சினை வெடித்தாலும் அதை அத்தனை எளிதாக வெளியில் விடமாட்டார். அவரது கையை மீறிப் போன விஷயம் என்றால், அழகிரிக்கும் மாறன் சகோதரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் தான். அழகிரி பற்றிய கருத்துக் கணிப்பை தினகரனில் போட வேண்டாம் என்று கலைஞர் சொன்னதையும் கேட்காமல், கருத்துக் கணிப்பை வெளியிட்டதால் அழகிரி ஆதரவாளர்கள் மதுரையில் தினகரன் அலுவலகத்தையே தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, மாறன் சகோதரர்களை ஒதுக்கிவைத்த கலைஞர், அறிவாலயத்தை விட்டு சன் டிவி அலுவலகத்தையும் வெளியேற்றினார். அதையடுத்து தான் 2007ல் 'கலைஞர் டிவி'யை ஆரம்பித்தார் தலைவர். அப்போது, 'திடீரென டிவி சேனல் தொடங்க எங்கிருந்து வந்தது பணம்?' என எதிர்க்கட்சி தலைவராக இருந்த ஜெயலலிதா கேள்வி எழுப்பினார். 'சன் டிவியில் இருந்த எனது மனைவி தயாளுவின் 20 சதவீத பங்குகளை விட்டுக் கொடுத்ததில் 100 கோடி ரூபாய் வந்தது. அதில் தான் சேனல் தொடங்கப்பட்டது' என்று சொன்னார் கலைஞர்.

மாறன் சகோதரர்களை ஒதுக்கி வைத்த கலைஞர் பிரச்சினையின் தாக்கம் தணிந்ததும், 'கண்கள் பனித்தது... இதயம் இனித்தது' என்று சொல்லி அவர்களை மீண்டும் அரவணைத்துக் கொண்டார். இப்போது கலைஞரின் இடத்தில் முதல்வர் ஸ்டாலின் இருக்கிறார். அதனால் தான் விவகாரத்தை அவரது கவனத்துக்கு கொண்டு போயிருக்கிறார் தயாநிதி மாறன். திமுகவின் வளர்ச்சிக்கு சன் டிவியும் சன் டிவியின் வளர்ச்சிக்கு திமுகவும் பக்கபலம் என்பதை மறுப்பதற்கில்லை. திமுக குடும்பத்துக்குள் வாரிசு சண்டை வெடிக்காதா என எதிர்க்கட்சிகள் காத்துக் கொண்டிருக்கின்றன. இந்த விவகாரத்தில் கலாநிதி மாறனுக்கு ஆதரவாகப் பேசுவது போல் அண்ணாமலை பேசி இருப்பதையும் கவனிக்க வேண்டும்.

2ஜி வழக்கை வைத்து கலைஞர் டிவிக்கு என்னவெல்லாம் குடைச்சல் கொடுத்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதேபோல் தேர்தல் சமயத்தில் சன் குழும பிரச்சினைக்குள் பாஜக மூக்கை நுழைத்தால் திமுகவுக்கு நல்லதல்ல. ஆகவே இதற்கு மேல் இதை வளர விடாமல் முதல்வர் ஸ்டாலின் தான் இரு தரப்பையும் அழைத்துப் பேசி பிரச்சினையை சுமுகமாக முடிக்க வேண்டும்.

தான் கேட்டதை தராவிட்டாலும் பொதுவான மதிப்பீட்டாளர் ஒருவரை வைத்து இரண்டு தரப்பும் ஏற்கும் வகையில் ஒரு நியாயத்தை தனக்குச் சொல்ல வேண்டும், ஸ்டாலின் மத்தியஸ்தராக இருந்து அதை செய்து கொடுக்க வேண்டும் என நினைக்கிறார் தயாநிதி. இப்படி சுமுகமாக பேசி முடித்துவிட்டால் மாறன் குடும்பத்தையும் சங்கடத்தில் இருந்து மீட்கலாம், சன் டிவி சப்போர்ட்டையும் திமுக தக்கவைத்துக் கொள்ளலாம்" என்கிறார்கள்.

# ரூ.2,000 கோடி மதிப்பிலான ராணுவ தளவாட கொள்முதலுக்கு மத்திய அரசு ஒப்புதல்



எல்லைப் பாதுகாப்பில் இந்திய ராணுவம்

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான திறனை மேம்படுத்த ரூ.2,000 கோடி மதிப்பிலான கொள்முதல் ஒப்பந்தங்களுக்கு பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

அவசரகாலக் கொள்முதல் தொடர்பான நெறிமுறைகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சகம் 13 ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளது. ஒட்டுமொத்தமாக ரூ. 1,981.90 கோடி மதிப்பில் இந்த ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. அவசரகால கொள்முதல் ஆணையின் கீழ் கொள்முதல் நடைமுறைகள் விரைவுப்படுத்தப்படும். பயங்கரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் பாதுகாப்பு படையினரின் செயல்பாட்டுத் திறன்களை மேம்படுத்துவதை இந்தக் கொள்முதல் நடவடிக்கைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

கொள்முதல் செய்யப்படும் ஆயுத தளவாடங்கள் விவரம்: ஒருங்கிணைந்த ட்ரோன் கண்டறிதல் மற்றும் இடைமறிப்பு அமைப்புகள், குறைந்த அளவிலான இலகுரக ரேடார்கள், மிகக் குறுகிய தூர வான் பாதுகாப்பு அமைப்புகள், ஏவுகணைகள், தொலைதூரத்தில் இயக்கப்படும் வான்வழி வாகனங்கள் (RPAVகள்), செங்குத்தாக மேலெழுந்து சென்று அதே போன்று தரையிறங்கக் கூடிய போர் விமானங்கள், குண்டு துளைக்காத ஜாக்கெட்டுகள், விரைந்து எதிர்வினையாற்றும் கனரக மற்றும் நடுத்தர போர் வாகனங்கள், இரவில் இலக்கை அடையாளம் காணும் வகையிலான துப்பாக்கிகள், இத்தகைய தளவாடங்களை கொள்முதல் செய்வதன் மூலம், அதிகரித்து வரும் பாதுகாப்பு தொடர்பான சவால்களை பாதுகாப்பு படை எதிர்கொள்ள உதவிகரமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

RNI No. TNTAM / 2021 / 85933

# வருவாய் துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக தற்செயல் விடுப்பு பேரணி




திண்டுக்கல் மாவட்டம் வருவாய் துறை சங்கங்களின் கூட்டமைப்பு (FERA) சார்பாக திண்டுக்கல் மாவட்டம் திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் கல்லறை தோட்டம் அருகே (25.06.2025) மாநிலம் தழுவிய தற்செயல் விடுப்பு பேரணி நடைபெற்றது..

இந்தப் பேரணிக்கு தலைமையேற்று தா. ஜான் பாண்டியன்.( TNROA) மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சி. இராஜரத்தினம் (TNVAOA மாவட்ட ஒருங்கிணைப்பாளர், இ.ரா.விக்னேஷ் (TNSOU) மாவட்ட ஒருங்கிணைப்பாளர், கா. சக்திவேல்.( TWRVEA) மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் இணைந்து தலைமையேற்றி நடத்தி வைத்தனர் அதனைத் தொடர்ந்து துவக்க உரையினை மா சுகந்தி மாவட்டச் செயலாளர்( TNROA) உரையாற்றினார் அவரைத் தொடர்ந்து வாழ்த்துரையினை (TNMCOA) மாநிலத் தலைவர் K.முருகானந்தம் (TNTPEA) மாநில பொதுச் செயலாளர் D. மகாலிங்கம்.( TNHRREA) மாநிலத் துணைத் தலைவர் T. இராஜமாணிக்கம். (TNNMEA) மாநில பொதுச்செயலாளர் ஆ. ஜெசி. (TNROA) மாநிலத் துணைத் தலைவர். ச. கண்ணன் (TNROA) மாவட்ட பொருளாளர் K.பெரியசாமி. (TNSOU) மாநில துணைத்தலைவர் பச்சையாண்டி (TNVAOA) மாவட்ட செயலாளர் முகமது சர்புதீன் TNVAOA மேனாள் மாவட்ட தலைவர். R பழனிச்சாமி. இரா.முருகன். மாவட்ட தலைவர். R ரகுநாதன் மாவட்ட தலைவர்( TNVREA) T. மகேந்திரன் ஒருங்கிணைப்பாளர்( TNVREA) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் இதன் தொடர்ச்சியாக.S. முபாரக் அலி மாவட்ட தலைவர் (TNGEA) நிறைவுறை ஆற்றினார்.

அவறினைத் தொடர்ந்து பால குருநாதன் TNROA) மாவட்டத் துணைத் தலைவர் நன்றியுரை கூறி நிகழ்ச்சியினை நிறைவு செய்தார் இத்தகைய பேரணியில் வருவாய் துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக ஒவ்வொரு வருடமும் ஜூலை ஒன்றாம் நாளை பசலி ஆண்டின் தொடக்கம் வருவாய்த் துறையின் தினமாக அனுசரித்து அரசாணை வெளியிட வேண்டும் என உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி தர்ணா போராட்டம் நடைபெற்றது. மாவட்டம் முழுவதும் உள்ள வருவாய் கிராம உதவியாளர் முதல் வட்டாட்சியர் வரை உள்ள அனைத்து வருவாய் துறை ஊழியர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.




Printed/Published /Owned by **G. B. PACHAIYAPPAN** Printed at Seaman Graphics at
No 7/253 K.V. N. Puram, 2nd Street, Kilpauk Gardan, Chennai - 600010.
Published at No. E-44 Rajamuthaiyapuram, Raja Annamalaipuram, Mandaiveli, Chennai - 28.
Editor-**G.B. PACHAIYAPPAN** Email : saandrorkural@gmail.com, Mobile:9962235002

# நெல் ஜெயராமன் மகன் சீனிவாசனின் படிப்பு செலவைக் கட்டி வருகிறார் நடிகர் சிவகார்த்திகேயன்



மறைந்த சமூக ஆர்வலர் நெல் ஜெயராமன் மகன் சீனிவாசனின் கல்வி கட்டணத்தை கடந்த 7 வருடங்களாக நடிகர் சிவகார்த்தி கேயன் செலுத்தி வருவதாக நந்தன் திரைப்படத்தின் இயக்குநர் சரவணன் தெரிவித்துள்ளார்.

தம்பி சிவகார்த்திகேயன் சொன்ன சொல் தவறாமல் ஒவ்வொரு வருடமும் தேர்வு நேரத்தில் போன் செய்து நெல் ஜெயராமன் மகன் சீனிவாசனை விசாரிப்பார்.

அண்ணன் நெல் ஜெயராமன் மறைந்த போது, அவர் மகனின் படிப்பு செலவை ஏற்பதாகச் சொன்னார் தம்பி சிவகார்த்தி கேயன். இப்படிச் சொல்கிறவர்கள் அப்போதைக்கு உதவுவார்கள். அடுத்தடுத்த வருடங்களில் நாம் நினைவூட்டினால், கொஞ்சம் சலிப்பு காட்டிச் செய்வார்கள். பின்னர் மறந்தே போவார்கள். ஆனால், தம்பி சிவகார்த்திகேயன் சொன்ன சொல் தவறாமல் கடந்த 7 வருடங்களாக நெல் ஜெயராமன் மகன் சீனிவாசனின் படிப்பு செலவைக் கட்டி வருகிறார். பணம் கட்டுவது மட்டுமல்ல, ஒவ்வொரு வருடமும் தேர்வு நேரத்தில் போன் செய்து விசாரிப்பார். அன்பும் அக்கறையுமாகப் பேசுவார்.

இந்த வருடம் சீனிவாசன், கல்லூரி படிப்பில் கால் வைக்கிறார். எந்தக் கல்லூரி, என்ன படிப்பு என்கிற விவரங்களை விசாரித்து, கோவை கற்பகம் கல்லூரியில் பேசி அவரைச் சேர்ந்திருக்கிறார் சிவா. நெல் ஜெயராமன் உயிரோடு இருந்திருந்தால் மகன் சீனிவாசனின் படிப்புக்கு என்னவெல்லாம் செய்திருப்பாரோ, அதற்குக் கொஞ்சமும் குறைவில்லாமல் அக்கறை காட்டுகிறார் சிவகார்த்திகேயன். அப்போலோ மருத்துவமனையில் மருத்துவர்கள் கைவிரித்த நிலையில், பாண்டிச்சேரி படப்பிடிப்பில் இருந்து ஓடிவந்து, நெல் ஜெயராமனின் கைகளைப் பற்றிக் கொண்டு, 'நானிருக்கிறேன் அண்ணன்' என சிவகார்த்தி கேயன் நம்பிக்கை சொன்ன காட்சி, அப்படியே நெஞ்சுக்குள் விரிகிறது. நம்பிக்கையாகவே நின்று காட்டும் தம்பிக்கு நன்றி... ●


கல்யாண சீர்வரிசை பாத்திரங்கள் மற்றும்
பர்னிச்சர்கள் வாங்க கைராசியான ஸ்தாபனம்
பேக்டரி விலைக்கே கிடைக்கும்
நல்லதே செய்வோம்! துவக்கம் 1983 நல்லதே நடக்கும்!
நிதில் & கோ
35 ஆண்டுகளாக மக்கள் சேவையில்... (கைராசியான ஸ்தாபனம்)
368/2, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21. Ph : 044: 2590 0947, 2596 2323